2 DEC 1981

16.1.1981 50காசு





உலகத் தமிழ் மாநாட்டிற்கென மதுரை பந்தயத்திடலில் அமைக்கப்பட்டிருந்த வள்ளுவர் அரங்கில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றுகிறார் (4.1.1981).



தமிழரசு
மலர்:11 இதழ்:14
16-1-'81

உலகத்தமிழ் மாநாட்டின் நிறைவுநாள் விழாவில் மாண்புமிகு பிரதமரும் மாண்புமிகு முதல்வரும்.

அட்டையில் : உலகத்தமிழ் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்த தமிழ்த்தாய் சிலை.



# தன்னேரில்லாத் தமிழ்

## மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி உரை

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டினைத் தொடங்கி வைக்குமாறு எனக்கு வழங்கிய இந்த அன்பழைப்பு குறித்துப்பெரிதும் பெருமிதம் அடைகின்றேன். இதற்கு முன்னர் உலகத்தமிழ் மாநாடுகள் நான்கு வேறு இடங்களில் நடைபெற்றுள்ளன. இவற்றுள் மூன்று மாநாடுகள் இந்திய நாட்டிற்கு வெளியே அயல்நாடுகளில் நடந்தன. தமிழ் மாநாட்டின் உலகளாவிய இயல்பைப் புலப்படுத்த இவ்வுண்மை ஒன்றே போதியதாகும். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் நற்பேறு இப்போது மதுரை மாநகருக்கு வாய்த்துள்ளது. உலகப் பேரறிஞர்களாகிய பெருமக்களைக் கூட்டி, விருந்து புரந்து விழா எடுக்கும் பேறுவாய்த்தது குறித்து இம்மாமதுரை பெருமகிழ்ச்சி எய்துகின்றது என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டிற் பங்கு பெற வருகை தந்து குழுமியிருக்கும் அறிஞர் பெருமக்கள் அனைவரையும், குறிப்பாக அயல் நாட்டிலிருந்து இவண் போந்துள்ள அறிஞர் பெருமக்கள் அனைவரையும் வருக வருக என உளமார மகிழ்ந்து வரவேற்கிறேன்.

தமிழ் மொழியின் தோற்றம், தொன்மை குறித்து அறிஞர்கள் பலர் அரிய ஆய்வுகள் செய்துள்ளனர். இத்தகைய ஆய்வுப் பணி இன்று போலவே என்றும் நெடுங்காலத்துக்குத் தொடரும். முற்றிலும் கல்வியாளர்களே நடத்துகின்ற ஆய்வுத்திறனை வளர்க்கின்ற அறிவுலக ஆய்வுப்பணியாக மட்டுமே நின்றுவிடலாகாது. ஆய்வுப் பணியில் நடை முறைக்கூறுகளும் இடம்பெற வேண்டும். ஒரு நாட்டின் பண்பாட்டோடு மொழி நெருங்கிய பிணைப்புக் கொண்டதாகும். ஒரு மொழியின் தொன்மை நலம், காலந்தோறும் அம்மொழி அடைந்துவரும் வளர்ச்சி நிலைகள், தொடர்ந்து அம்மொழியில் விளையும் மாறுதல்கள் ஆகியவற்றால் ஒரு நாட்டுப் பண்பாட்டின் செழுமையை ஓரளவு கணிக்கலாம்.

உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களில், குறைந்தது மூன்றில் ஒரு பங்கேனும் திராவிட மொழிகளைப் பேசிய மக்களுடன் நெருங்கிய தொடர்புடையதாகும் என அறிய முடிவதாக அறிஞர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். திராவிட மொழிகளுக்குள்ளே தலையானதாக, பண்பட்ட உயர்தனிச் செம்மொழியாக, மிகச் சிறந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளதாகத் தமிழே திகழ்கிறது என்பதைப் பலரும் ஒப்பியுள்ளனர். தமிழ் மொழியின்கண் எழுந்துள்ள நூல்களில் இன்று நமக்குக் கிட்டியவற்றுள் மிகத் தொன்மை வாய்ந்த நூல் தொல்காப்பியமாகும். தமிழ் மொழியின் தொன்மைக்கும் பெருமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இந்நூலே திகழ்கிறது. இவ் விலக்கண நூலின்கண் கூறப்பட்

டுள்ள பல்வேறு குறிப்புக்களின் வாயிலாக, இந்நூல் தோன்றுதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் இலக்கியம் பெரிதும் வளர்ந்திருந்ததை இந் நூல் இனிது உணர்த்துகிறது.

இலக்கணத்தைக் கற்பது எளிமையும் இனிமையும் வாய்ந்ததன்று. திருக்குறளாகிய தமிழ் மாமறையில் தமிழ்ப் பண்பாட்டின் பெருமையும் பேரழகும் சுவை நலங்கனிய ஒளிர்ந்து மிளிர்கின்றன. திருக்குறளில் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்கள் எக்காலத்துக்கும் எந்நாட்டவர்க்கும் எச்சமயத்தவர்க்கும் ஏற்புடைய பொதுமனப்பாங்குடையன; இந்துக்கள், சமணர்கள், பௌத்தர்கள் முதலான பல்வேறு சமயத்தினரும் தத்தம் நூலென மகிழ்ந்து உரிமை கொண்டாடும் அளவுக்குத் திருக்குறளில் பொதுமைமாட்சி பெரிதும் பொலிகின்றது. மொழி, இன, நாட்டு எல்லை வரம்புகளைக் கடந்து நின்று, மாந்தர் யாவர்க்கும் ஒன்றே குலம் என்னும் உலக ஒருமையை உணர்த்து கிறது. மனித குலத்தின் அறவுணர்வுகள், சமயங்கள் தொடர்பான அறிவுத்துறைகளில் ஆழ்ந்த புலமை வாய்ந்த டாக்டர் ஆல்பர்டு சுவைட்சர் " உயர்ந்த இலட்சியங்களை எடுத்தியம்பும் முதுமொழிகளின் கோவை திருக்குறளில் இடம் பெற்றுள்ள அளவுக்கு உலகின் வேறு இலக்கியங்களிலும் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை" என்று வியந்து பாராட்டியுள்ளார். பிறிதொரு மேலை நாட்டு மதிவாணர் "மனிதனின் சிந்தனையின் உயர்ந்த தூய்மை யான வெளிப்பாடாகத் திருக்குறள் திகழ்கிறது" என்று குறித்துள்ளார்.

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் "

என்று கூறும் குறட்பாவில் எத்துணைப் பொதுமையும், புதுமையும் இணைந்துள்ளன !

திருக்குறளாகிய பெருநூல் எச்சூழ்நிலையில் எங்கிருந்து தோன்றியிருக்கும் ? திருவள்ளுவர் எனும் தனியொரு மனிதர் தாம் வளர்ந்த பண்பாட்டுச் சூழலையும், தாம் வாழ்ந்த காலத்து உணர்வுகளையும் மறந்து எழுதியிருக்க இயலுமா? இயல்பான தன் பெருந் திறத்தைப் புலப்படுத்துவதோடு, அந்நாளைய பண்பாட் டின் பெருமையையும் திருக்குறள் பறைசாற்றி பண் பாட்டுப் படிம இலக்கியங்களின் சிறந்த படைப்பாக மலர்ந்துள்ளது.

இவ்வாறு தமிழ் மொழியும் தமிழ்ப்பண்பாடும் இனிதிணைந்து நூற்றாண்டு தோறும் பல்வேறு துறை களிலும் கிளைத்துப் படர்ந்து வளர்ந்தன. காலந் தோறும் பல அறைகூவல்கள் எழுந்தன; பல்வேறு புதிய நிலைகள் தோன்றின; அவற்றுக்கெல்லாம் தக்கவகை யில் தமிழ் ஈடுகொடுத்து வந்துள்ளது.

மாந்தர் மன நிலைகளும், உணர்வுக் கூறுகளும் உறழ்ந்து நின்று, இலக்கியத்துக்கும் மொழிக்கும் வளஞ் சேர்த்துள்ளன. தமிழ் இலக்கியங்கள் சமயச் சார்பின்றித் திகழ்ந்த காலம் உண்டு. பின்னர்க் காலவெள்ளத்தில் சமய உணர்வுகளும் ஆன்மிகக் கருத்துக்களும் தம் முத்திரைகளை இலக்கியங்களில் மிக ஆழமாகப் பதித் தன; மெய்ப்பொருளைக் காண்பதற்கான அடிப்படை நெறியை ஆன்மிகமும், சமய உணர்வுகளும் வகுத்துரைத் துள்ளன. கடந்த நூற்றாண்டு வரையில், சமய, தத்துவ உணர்வுப் போக்கு தமிழ் இலக்கியத்தில் தொடர்ந்து அமைந்து வந்ததைக் காண்கிறோம். சமய குரவர் களாகிய பெருமக்கள் பலர் இலக்கியப் புலமையில் ஈடற்று விளங்கினர். தங்களின் சமயப் பணிக்கு அடுத்த நிலையில் தமிழ்ப் பணியையே தலையாய கடமையாக அவர்கள் ஏற்றிருந்தனர். இறை பற்றுக்கு இணைந்த நிலையில் சமயச் சான்றோர்கள் தமிழ்ப் பற்றைப் பற்றி

நின்றனர். தமிழ் உணர்வின் அகலத்தையும் ஆழத்தையும் புலப்படுத்தும் வகையில் அறவுணர்வு—சமய நெறிக் கோட்பாடுகள் அந்நாளில் தமிழகத்தில் நிலவின. சமண சமயமும் பௌத்த சமயமும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழரின் சிந்தனைச் செல்வத்திற்கும் ஆற்றியுள்ள அருந்தொண்டுகளை அனைவரும் அறிவர். வடமொழி அறிவும் தமிழுக்கு இவ்வகையில் வலிவும் உணர்வும் ஊட்டியுள்ளது. பின்னர் வந்த இசுலாமிய சமயமும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்துணையாக நின்றதோடு தமிழிலக்கியத்தில் சமூக—சமயச் சிந்தனைகளில், புதிய வடிவ நலங்களைச் சேர்த்தது. கிறித்தவ சமயம் தனக்கேயுரிய வகையில் தமிழுக்குச் சிறப்பான பணியை ஆற்றியது; இதைத் தொடர்ந்து புதுமைக் காலம் பிறந்தது.

மனமும், உணர்வும் வளர்ந்து விரிவடையும்போது அவற்றின் செயல்கள் கலை, இலக்கியம் என்ற நிலைகளோடு தேங்கிவிடுவதில்லை. அவ்வகையில் உலகில் பல்வேறு நாடுகளுடனும் இந்திய நாட்டில் தமிழ் வழங்கிய இப்பகுதி விரிந்து பரந்த பல வகைத் தொடர்புகளைக் கொண்டிருந்தது. கப்பற் போக்குவரத்தும் அயல்நாட்டு வாணிகமும் இங்கே பெரிதும் வளர்ந்திருந்தன; தமிழகத்தின் நோக்கும் தொடர்பும் விரிந்து பரந்து விளங்க அத்தொடர்புகள் உதவின; தமிழகம் செல்வ வளம் பெற்று ஓங்கவும் அவை உறுதுணையாயின. உள்நாட்டு, வெளிநாட்டு வாணிக வளத்தால் காவிரிப்பூம்பட்டினம் செல்வ வளங் கொழித்துச் சிறப்படைந்திருந்ததைப் பட்டினப்பாலை உணர்த்துகிறது.



நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு

—பட்டினப்பாலை 185–193

இந்நாட்டு மக்களைப் பற்றியும் அவர்தம் பண்பாட்டைப் பற்றியும் அயல்நாட்டிலிருந்து தமிழகம் வந்து சென்ற வழிநடையாளர்களும், அறிஞர்களும் பல கருத்துக்களையும் செய்திகளையும் கூறியுள்ளனர். கிரேக்க-உரோமநாடுகளுடனும், பிறமேலை நாடுகளுடனும் தமிழகம் கொண்டிருந்த வாணிகத் தொடர்புகள்பற்றி அயல்நாட்டவர் குறித்த குறிப்புக்கள் தமிழிலக்கியத்தில் கூறப்படும் செய்திகளை வலியுறுத்தும் சான்றுகளாக அமைந்துள்ளன. கி.பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிரேக்க, உரோமானிய அறிஞர்களும் நிலவியல் வல்லுநர்களும் விளக்கியுள்ள செய்திகளும் அரணாக நிற்கின்றன. ஆர்மசு துறைமுகத்திலிருந்து ஏறக்குறைய நூற்றிருபது மரக்கலங்கள் பாய் விரித்துச் சென்றதைத் தாம் நேரில் பார்த்ததாகக் கி.மு. 25-ல் ஸ்டிராபோ கூறியுள்ளார். பாண்டிய மன்னன் தூதுவர் இருவரை அகஸ்டஸ் என்ற உரோமாபுரிப் பேரரசர் அவைக்குப் அனுப்பி வைத்தது பற்றியும் ஸ்டிராபோ குறிப்பிட்டிருக்கிறார்.

ஆங்கிலேயரின் ஆட்சி ஏற்பட்ட பிறகு, அயல் நாட்டவரின் செல்வாக்கால், புதினம், சிறுகதை, கட்டுரை,

பயணக் கட்டுரை, வாழ்க்கை வரலாறு போன்ற புதிய இலக்கிய வடிவங்களும் உத்திகளும் தோன்றலாயின. இப்புதிய இலக்கிய வடிவங்கள் படிப்படியாக மக்களிடம் பெருஞ் சிறப்பையும் முதன்மையையும் பெற்றுள்ளன. இந்திய மொழிகளின் இலக்கிய மறுமலர்ச்சிக்கும் விடுதலைப் போராட்டம் வித்தூன்றியது. நாட்டுப்பற்றைத் தம் இனிய செந்தமிழ்ச் சந்தப் பண்களோடு சேர்த்து மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டிக் கிளர்ந்தெழச் செய்தார். பண்டிதர்களிடமும், அறிஞர்பெருமக்களிடமும் தளைப் பட்டிருந்த தமிழ் மொழிக்கு விடுதலை அளித்து பாமர மக்களும் படித்தறிந்து போற்றி மகிழும் வண்ணம் தமிழின்பத்தை வழங்கிய முன்னோடியாகத் திகழ்ந்தவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார். பாரதியாரின் பாடல்கள் நாட்டுப்பற்று எனும் தணியா வேட்கையில் விளைந்தவை. பாரதியாரை புதிய பாரதத்தின் எழுச்சிக் கவிஞர் என்றழைப்பது சாலப் பொருத்தமாகும். நாட்டுப் பற்று வெள்ளமெனப் பெருகிப் பொங்கும் பாரதியாரின் பாடல்களிலே சமூக, பொருளாதார மறுமலர்ச்சி பெற்ற புதிய இந்தியாவின் காட்சி புலனாகின்றது.

பாரதியாரின் புதிய மரபின் வழி நின்று முன்னேறி வரும் தற்காலக் கவிஞர்கள் தம் பாடல்களின் வழியாகத் தமிழின் எல்லைக் கூறுகளை விரிவாக்கி பாமர மக்களுக்கும் தமிழ் உணர்வை ஊட்டி வருகின்றனர். டாக்டர் மு. வரதராசனாரின் நூல்கள் அவருடைய ஆழ்ந்த புலமையைக் காட்டுவன; அதேநிலையில் பொது மக்கள் அனைவரையும் ஈர்ப்பன. படிப்பவர் நெஞ்சில் விழுமிய நோக்கங்களைப் பதிப்பன. இவ்வாறு வளங்கெழுமிய பண்பாட்டு மரபைக் கொண்ட தமிழ் மொழியையும், தமிழிலக்கியங்களையும் கற்பதன் மூலம், அனைத்து நாட்டு அறிஞர் பெருமக்களிடம் தமிழ் ஈடுபாடும் ஆர்வமும் விளைந்திருப்பதில் வியப்பில்லை. எனவே உலகின் பெரிய நாடுகள் எனத்தக்க அனைத்து நாடுகளும் தங்கள் கல்வி நிலையங்களில், பல்வேறு நிலைகளில் தமிழ்த் துறைகளை ஆங்காங்கே நிறுவியுள்ளன.



அறிவியல் கண்டுபிடிப்புகளின் மூலம் புதிய கலைகளும், அறிவியலும் இந்நாளில் பெருகி விரிந்து வளர்ந்து வருகின்றன. இவையனைத்தும் காலத்தின் விளைவாகும். என்றும் மாறாத தனித்தன்மையைக் கொண்டிலங்குவதோடு, புதிய சிந்தனைகளையும், புதிய அறிவுத்துறைகளையும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் புதிய சொற்களும், புதிய கருத்துக்களும் தன்னிடம் வந்தமையும் வகையில் தமிழ் மொழி இடம்தர வேண்டும் என்பது என் பணிவான கருத்தாகும். இவ்வாறுதான் ஒரு மொழி வளர்ந்து மானுடச் சிந்தனைத் துறை அனைத்தையும் தழுவி நிற்கிறது. '' யாதும் ஊரே யாவரும் கேளிர் '' என்று சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார் உரைத்த குறிக்கோள்மொழியின் வழியில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவது முற்றிலும் பொருத்தமாகும். சங்கச் சான்றோர் உரைத்த இச்சால்புரையை நினைவூட்டி உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்பதுடன், உங்கள் கருத்தரங்கம் பல்லாற்றானும் உரிய பயன்களை உலகுக்கு வழங்க வேண்டும் என்று வாழ்த்தி அமைகின்றேன்.

*( உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்கவிழா உரையிலிருந்து... 4-1-1981 )*

# உலகத் தமிழர் ஒன்றுபடுவோம்

## மாண்புமிகு முதல்வர்

5வது உலகத் தமிழ் மாநாடு ஓராண்டுக்கு முன்பேயே நடந்திருக்கவேண்டும்; தவறிவிட்டது. இப்போது கூட, குறிப்பிடப்பட்ட தேதியில் இதை நடத்துவார்களோ, மாட்டார்களோ என்று பலர் சந்தேகப்பட்டனர். தள்ளி வைத்துவிடுவார்கள் என்றுகூடச் சிலர் கருதினர்.

''அறிஞர்கள், அதிகாரிகள், இளைஞர்கள், பொறுப்புமிகுந்த கட்சிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு முடிவு எடுத்தால் எதையும் எங்கேயும் எப்படியும் நடத்திக்காட்ட முடியும் என்பதைத்தான் 5-வது உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழா எடுத்துக்காட்டுகின்றது.

''உலகத் தமிழ் மாநாடு என்னும் அரிய மாநாட்டை தமிழகத்தில் தொடங்குவதற்கு வித்திட்ட-ஒப்புக்கொண்ட முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்களின் உழைப்பும்-எனது தெய்வம் - என் ஆசான் - பேரறிஞர் அமரர் அண்ணா அவர்கள் 2-வது மாநாட்டில் ஏற்றிருந்த முழுமையான பொறுப்பும் என்னை ஆட்டிப் படைத்து இந்த மாநாட்டை நடத்துகின்ற வகையில் எனக்கு ஊக்கத்தைத் தருகின்றது. இன்று அமரர் அண்ணா அவர்கள் நம்மிடையே இல்லை; ஆனால் அவர் எனது இதயத்தில் இருந்து எனக்கு ஊக்கத்தையும் நல்ல கருத்தையும் தந்து என்னை வழிநடத்திச் செல்கிறார் என்பதை நான் மறுக்க முடியாது; இது மூடநம்பிக்கை என சொல்லலாம். என்னைப்பொறுத்தவரை இது நியாயமான நம்பிக்கை ஆகும்.

''பல பெரியவர்கள் இந்த மாநாடு கூடுவதற்கு ஆதரவு நல்கினார்கள். இந்தி பேசும் மாநிலத்தவர்கள்-ஆந்திர மாநிலத்தவர்கள்-மராட்டிய மாநிலத்தவர்கள்-தொலைபேசியின் மூலம் அடிக்கடி-தமிழ் மாநாடு எப்போது என்று என்னை வினவியவாறே இருந்தார்கள்.

''இங்கே தமிழ் குறித்து பல பிரச்சினைகள் பேசப்பட்டன. அவற்றிற்கு வழிகாணும் முறை பற்றியும் சொல்ல முயன்றார்கள். வெவ்வேறு கருத்துக்களை சொன்னார்கள்; அதற்காகத்தான் 5-வது உலகத் தமிழ் மாநாடு கூட்டப்படுகிறது.

''குழந்தையைப் பெற்றவர் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் மற்றவர்கள்-உற்றவர்கள்-இந்தச் சட்டையைக் குழந்தைக்குப் போடு -அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்-இந்த ஆசானைத் தேர்ந்தெடு என்றெல்லாம் கருத்துக்கள் தெரிவிப்பது போல-தமிழைப் பாதுகாக்க-தமிழை வளர்க்க யோசனை சொல்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

''ஆராய்ச்சிக் கருத்தரங்கில் மாறுபட்ட கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. எல்லோரும் ஒரே எண்ணத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வதற்காக அல்ல மாநாடு! அவர்கள் தங்களது ஆற்றலை - வலிமையைப் பயன்படுத்தி தமிழைப் பாதுகாக்கும் வழியைச் சொல்கின்ற மாநாடு இது.

''தமிழ் எழுத்தில் சீர்திருத்தம் தேவை என்று சிலர் குறிப்பிடுகின்றனர். வரவேற்கிறேன்; ஆனால் சீர்திருத்தம் என்று செல்லிக்கொண்டுமேலும்மேலும் எழுத்துக்களைச் சேர்த்துக் கொண்டு போகக் கூடாது; ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள்தான் உள்ளன. அது உலக மொழியாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. எனவே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் எழுத்துக்களைக் குறைப்பதாக அமையவேண்டும்-அதிகமாக்கக் கூடாது.

''தமிழ் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று சிலர் குறிப்பிட்டார்கள். இராமநாதபுரத்தில் ஒருவகையாக-மதுரை மாவட்டத்தில் ஒரு விதமாக-நெல்லையில் ஒரு விதமாக-கோவையில் ஒரு விதமாகத் தமிழ் பேசப்படுகிறது. இவற்றை ஒன்றுபடுத்தவேண்டும் என்றால் மிகப் பெரும் பணி செய்யவேண்டும். தமிழக அரசு இதனைத் தக்க வகையில் செய்யும்.

''தமிழ் மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பேசக்கூடிய மொழி வேண்டும் என்றார்கள். ஏற்றுக் கொள்வோம்; ஆனால் இலக்கண ரீதியாக-அந்த மொழி அமைய



வேண்டும் என்பது மட்டுமல்ல, ஏழை மக்களின் உள்ளத்தைத் தொடும் மொழியாக-அது இருக்கவேண்டும். பேசும் மொழியும் எழுதும் மொழியும் ஒருங்கிணையும் நிலையை உருவாக்கவேண்டும் என்பது சுமையானதோர் பொறுப்பு; அதனை உணர்ந்து ஏற்றுச் செயல்புரிய வேண்டும்.

''உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றை இங்கே தமிழக அரசு அமைக்கும்- பேரறிஞர்களிடம் அது ஒப்படைக்கப்படும்; நிர்வாகத்தை மட்டும் அரசு கவனித்துக்கொள்ளும். இந்த உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் மக்கள் அக்கறை கொள்ள வேண்டும். செப்டம்பர் திங்கள் 15ஆம் நாளில்-பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் உலகத் தமிழ்ச் சங்கம் தமிழ் வளர்ச்சிக்கு விழா எடுக்கும்.

''தமிழ் ஆட்சி மொழியில் அரசு அக்கறை கொண்டுள்ளது என்பது எல்லாருக்கும் புரிந்திருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. தமிழ் வழக்கு மொழியாக-வழக்கத்தில் உள்ள மொழியாக மட்டுமல்ல-வழக்குமன்றத்தில்-நீதிமன்றத்தில் தீவிரமாக்கப்பட முயற்சி நடைபெறும்.

''உலகத்தின் பல நாட்டுப்பிரதிநிதிகளும் தமிழைப் பாராட்டிப் பேச வந்திருக்கும் இந்த நேரத்தில் ஒன்றை நினைவு கூர்தல் வேண்டும். நாம் ஒருபோராட்டத்திற்குத் தயாராக வேண்டும். அந்தப் போராட்டம் யாரையும் எதிர்த்தல்ல-எந்த மொழியையும் எதிர்த்தல்ல-யாரையும் சிறையில் தள்ளுவதல்ல அந்தப் போராட்டம்- யாரையும் அழிவுப் பாதைக்கு அனுப்புவதல்ல அந்தப் போராட்டம்; நாமே நமக்குள் நடத்திக் கொள்ள வேண்டிய போராட்டம் அது; தமிழில்தான் எழுதுவேன்-தமிழில்தான் பேசுவேன் என்று நமது உள்ளத்து உணர்வுடன் போராட வேண்டும் நாம். தமிழன் என்றொரு இனமுண்டு என்பதைத் திரைப்படத்தில் மட்டும் பாடிக்காட்டுவதோடு நின்றுவிடாமல், தமிழ் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பே இங்கு இருந்தது.... இப்போது எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

''நான் முன்பு, இலங்கை தி.மு.கவின் அழைப்புடன் இலங்கைக்குச் சென்றிருந்தபோது, அங்கு என்ன பேசுவது என்பது குறித்து அமரர் அண்ணா அவர்களிடம் கேட்டேன்.



"இலங்கையில் உள்ள தமிழர்களுக்கும் நமக்கும் கலாச்சாரத் தொடர்பு உண்டே தவிர, அரசியல் தொடர்பு கிடையாது, என்று அண்ணா அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். அதை அங்கு சென்று நான் தெரிவித்தேன்; இலங்கைத் தமிழர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

"இலங்கைத் தமிழருக்கு எந்தெந்த வகையில் ஆதரவு தர முடியுமோ அந்தந்த வகையில் எல்லாம் தருவோம். அந்த நாட்டின் ஆட்சி முறை குறித்து நாம் தலையிட முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவிப்பது என் நீங்காத கடமை என உணர்கிறேன்.

"அரசியல் சம்பந்தம் இன்றி முழுக்க முழுக்க தமிழுக்கு மட்டும் நடத்தப்படும் மாநாடு இது என்பதால்-அரசியல் குறித்து நாம் கவலைப்படாமல் தமிழ் மொழி குறித்து-தமிழ் வளர்ச்சி குறித்து இலக்கியம் குறித்து- கலாச்சாரம் குறித்து இம்மாநாடு கருத்துரை தெரிவிக்கிறது.

"உலகத் தமிழர் அனைவரும் ஒன்றுபடுவோம்! உலகத் தமிழர் அனைவரும் அறிவினால் ஒன்று படுவோம். தமிழ் இனத்தவரிடம் ஒருமை உணர்ச்சி ஏற்பட-ஏற்றத் தாழ்வு அகன்றிட-மத பேதங்கள் நீங்கிட - ஜாதி வெறி மறைந்திட நாம் பாடுபடுவோம்.

"தமிழைப் பயன்படுத்துவது குறித்து நாம் அக்கறை செலுத்தும் போது, சாதாரண உழைக்கும் மக்களுக்குத் தெரிந்த தமிழை நாம் உருவாக்குவோம். அப்படி உருவாக்கும் மொழியில் இலக்கியம் இருக்கவேண்டும்.

"கண்டிராஜன் என்னும் நாடகத்தில் ஒரு பாடல் வரும். அந்தப் பாடலில் நயம் இருக்கும். ஆனால் யாருக்கும் அதன் பொருள் எளிதில் புரியாது. அப்படி இருந்தால் பயன் என்ன?

"வாழ்க்கையில் அனைவரும் பேசும் ஒரே மாதிரி மொழியை அமைக்கவேண்டும். அதைச் செய்ய உலகத் தமிழ் ஆராய்ச்சிக் குழுவைத் தவிர வேறு ஒரு நிறுவனம் கிடையாது. அந்தப் பணிக்கு நீங்கள் எல்லாரும் காட்டுகின்ற ஒத்துழைப்புக்கு அடையாளம்தான் இந்த உலகத் தமிழ் மாநாடு"

(மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையுரையிலிருந்து).

# 1981

## தமிழக அரசு
## விடுமுறை நாட்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | வியாழன் | — | புத்தாண்டு நாள் |
| ,, | 14 | புதன் | — | பொங்கல் |
| ,, | 15 | வியாழன் | — | வள்ளுவர் திருநாள் |
| ,, | 16 | வெள்ளி | — | உழவர் திருநாள் |
| ,, | 19 | திங்கள் | — | மிலா-டி-நபி |
| ,, | 26 | திங்கள் | — | குடியரசு நாள் |
| ஏப்ரல் | 5 | ஞாயிறு | — | தெலுங்கு புத்தாண்டு நாள் |
| ,, | 13 | திங்கள் | — | தமிழ்ப் புத்தாண்டு நாள் |
| ,, | 17 | வெள்ளி | — | புனித வெள்ளி |
| மே | 1 | வெள்ளி | — | மே திருநாள் |
| ஜூன் | 30 | செவ்வாய் | — | வங்கி அரையாண்டு கணக்கு முடிவு |
| ஆகஸ்ட் | 2 | ஞாயிறு | — | ரம்சான் |
| ,, | 15 | சனி | — | சுதந்திரத் திருநாள் |
| செப்டம்பர் | 2 | புதன் | — | விநாயகர் சதுர்த்தி |
| அக்டோபர் | 2 | வெள்ளி | — | காந்தி பிறந்த நாள் |
| ,, | 7 | புதன் | — | ஆயுத பூஜை |
| ,, | 8 | வியாழன் | — | விஜயதசமி |
| ,, | 10 | சனி | — | பக்ரீத் |
| ,, | 26 | திங்கள் | — | தீபாவளி |
| நவம்பர் | 8 | ஞாயிறு | — | மொகரம் |
| டிசம்பர் | 25 | வெள்ளி | — | கிறிஸ்துமஸ் |
| ,, | 31 | வியாழன் | — | வங்கி முழு ஆண்டு கணக்கு முடிவு |

வளரும் தமிழகம் :



# தொழில் வளர்ச்சியில் நமது இலக்கு

### மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்

## எஸ். திருநாவுக்கரசு

வளர்ந்துவரும் மக்கட் பெருக்கம் பொதுவாக இந்திய துணைக் கண்டத்தில் பல்வேறு பிரச்சனைகளை எழுப்பியுள்ளது. வேலையின்மையால் சமுதாயத்திற்கு கேடுவிளையா வண்ணம் மனித சக்தியை ஆக்கப் பணிகளில் பயன்படுத்துவதற்காக, தகுந்த வேலை வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொடுத்து அதன்மூலம் பொருளாதார வளர்ச்சியைக் காண்பதே தமிழக அரசின் தொழிற்கொள்கையின் அடிப்படை நோக்கமாகும். குறிப்பாக வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ள ஏழை, எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை அமைத்துத் தந்து, அவர்களது வாழ்வில் மறுமலர்ச்சியினை உண்டாக்குதலை தமிழக அரசு தன் தலையாய பணியாக கொண்டுள்ளது. இவ்வுன்னத இலட்சியத்தை அடைய பெரிய, நடுத்தர தொழில்களை ஒரு கண்ணாகவும் சிறிய கிராமத் தொழில்களை மறு கண்ணாகவும் கருதி, தொழில் வளம் பெருக்கிட இவ்வரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

கடந்த சில ஆண்டுகளில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தமிழகம் சிறப்பான, வேகமான தொழில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. 1976-ஆம் ஆண்டில் சராசரி தொழில் உற்பத்தி 137 புள்ளியாக இருந்தது. 1979ல் 172 புள்ளியாக உயர்ந்துள்ளது. தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1977-ல் சுமார் 5 இலட்சமாக இருந்தது. 1979-ல் சுமார் 6 இலட்சமாக உயர்ந்துள்ளது. பதிவு பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 1976-77-ல் 186 ஆக இருந்தது 1979-80ஆம் ஆண்டு இறுதியில் 420 ஆக உயர்ந்துள்ளது. 1978-ஆம் ஆண்டு இறுதியில் இருபத்தி இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பத்திநான்காக (22,254) இருந்த பதிவுபெற்ற சிறுதொழில்களின் எண்ணிக்கை தற்போது சுமார் முப்பத்து இரண்டாயிரமாக (32,000) உயர்ந்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தொடர் முயற்சியின் விளைவாலும், மத்திய அரசின் ஒத்துழைப்பாலும் விரைவான முன்னேற்றம் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டவே இப்புள்ளி விவரங்களைக் குறிப்பிட்டேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதாவது 1980-85-ல், தொழில்களுக்கான முதலீடு சுமார் ஆயிரம்(1000) கோடியாக இருக்கும். ஆண்டுதோறும் 8 முதல் 9 விழுப்புள்ளிகள் என்கிற அளவில் தொழில் வளர்ச்சியில் வேகம் இருக்கும்வண்ணம் தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படும். சுமார் பத்து இலட்சம் பேருக்கு நேரிடையாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக்கள் உண்டாக்கித் தந்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாவட்ட தொழில் மையங்கள், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) ஆகியன தொழில் முனைவோருக்கு தொழிற்கூடங்கள் அமைத்துக் கொடுக்கும், மூலப் பொருட்களும், கடன் வசதிகளும் எளிதில் அளித்தும் உதவுகின்றன. நலிவுற்ற தொழில்கள் நலம் கண்டிடவும் வகைவழி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் (டிஐஐசி) மூலம் பெரிய, நடுத்தர தொழில்களுக்கு அதிக அளவில் கடன் உதவி அளிப்பதோடு மட்டுமின்றி, சிறு தொழில் முனைவோருக்கும் பயன்படும் விதத்தில், அதிகாரங்

கள் மாவட்ட அளவில் பரவலாக்கப்பட்டு ரூபாய் 25,000-வரை (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம்) கடன் வழங்கிட மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் உத்தரவு இட்டுள்ளார்கள். இக்கடன் தொகையில் அளவினை ரூபாய் 25000-ல் இருந்து ரூபாய் 50000-ஆக உயர்த்திட இவ்வரசு பரிசீலித்து வருகிறது. கூட்டுத்தொழில் செய்ய முனைவோருக்கு உதவிட தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் (டிட்கோ) தன் மூலதனப் பங்கினை செலுத்தி பெரிதும் உதவுவதோடு மட்டுமின்றி, பொதுத்துறையிலும் தானே தொழில்களை துவங்கியும் வருகிறது. சிப்காட்டின் மூலம் ஒசூர், இராணிப்பேட்டையில் அமைந்துள்ளதைப் போல் தொழில் இணையங்கள் (Industrial Complexes) மாவட்டம்தோறும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டு தொழில் முனைவோர்க்கு வேண்டிய நிலம், நீர், மின்சாரம் சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க இவ்வரசு தீர்மானித்துள்ளது. இம்முயற்சியின் தொடர்ச்சியாய் தொழில் இணையங்கள் ஏற்படுத்த முகவை மாவட்டம் மானாமதுரையிலும், புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டத்திலும் சுமார் 600 ஏக்கருக்கான நில ஆர்ஜிதவேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் தமிழ்நாடு தொழில் முன்னேற்றக்கழகம் (சிப்காட்) பெரிய நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கோ, பல்வகைப்படுத்துவதற்கோ, தேவையான நிதி உதவி அளிக்கிறது. பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 10.25 சதவீதம் வட்டி வீதத்தில் கடனுதவியும் மற்ற பகுதிகளில் 13.5 வட்டி வீதத்தில் கடனுதவியும் அளிக்கப்படுகிறது. இதுவரை சுமார் 400 பெரிய, நடுத்தர, நிறுவனங்களுக்கு சுமார் 45 கோடி ரூபாய் கடனாக அளிக்கப்பட்டுள்ளது. இதில் 90 சதவீத உதவி பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வுதவி பெற்ற நிறுவனங்களால் சுமார் 40,000 (நாற்பதாயிரம்) நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இலாபகரமான தொழில் முயற்சிகளை அறிந்து, ஏதுவான சாத்தியகூறு ஆய்வுகளை மேற்கொண்டு, அவற்றின் அறிக்கைகளை தொழில் முனைவோருக்கு அளிக்கிறது. மாநில அரசின் பிரதிநிதியாக இருந்து புதிய தொழில்களுக்கு சலுகைகள் வழங்கும் முனைப்பு திட்டத்தை இந்நிறுவனம் செயல்படுத்துகிறது.

உண்மையும் அன்பும் ஒரே காசின் இரண்டு பக்கங்கள் ஆகும். அந்தக் காசு ஒன்றுதான் என்றும், எங்கும் செல்லும் காசு; மற்றவையெல்லாம் செல்லாக் காசுகளே.

இயற்கை நமக்கு அளித்துள்ள மூலிகைகளை முறையாகப் பயன்படுத்தத்தெரிந்தால், தீராது என்று மேல்நாட்டு மருத்துவர்கள் கைவிட்ட பல நோய்கள் கூடத் தீரும்.

மாசு மருவற்ற இளமை, விலை மதிக்க முடியாத ஒரு சொத்து. இன்பம் என்று தவறாக எண்ணும் கண நேரம் மனக் கிளர்ச்சிக்காக ஊதாரித்தனமாகச் செலவழிக்க ஏற்பட்டதல்ல அது.

தவறு செய்வதில் பிழையில்லை. ஆனால், தவறு செய்ததை அறிந்து கொண்ட பின்னர், அதைத் திருத்திக் கொள்ளாமலிருப்பதுதான் பிழையாகும்.

—காந்தியடிகள்.

தொழில் துவங்குவோர்க்கு வழங்கப்படும் வட்டியில்லா விற்பனைவரிக்கடனின் உச்ச அளவு 15 இலட்சமாக இருப்பதை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உயர்த்திட பரிசீலித்து வருகிறார்கள்.

மாநில மாவட்ட அளவில் தொழில் அறிவு மிக்கவர்களைக் கொண்டு ஆலோசனைக் குழுக்கள் வெகு விரைவில் அமைத்து தொழில் வளர்ச்சியைப் பெருக்கிட இவ்வரசு முடிவெடுத்துள்ளது.

தொழில் துவங்கிட முன்வரும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள நலிவுற்ற பிரிவினராய் வாடிடும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோர்க்கு இவ்வரசு சிறப்பானசலுகைகளை வழங்குகிறது.

மத்திய அரசால் தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள 35 வட்டங்கள் தவிர, தமிழக அரசும் 25 வட்டங்களை தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக ஏற்கனவே அறிவித்து, இவ்வட்டங்களில் தொழிதுவங்குவோர் மானியத் தொகைகள் பெற்று வருகின்றனர். தமிழகத்தில் இன்றும் சில வட்டங்களை தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென தமிழக அரசு தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி வருவதோடு, மாநில அரசும் இன்னும் சில வட்டங்களை தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்க தீவிரமாக பரிசீலித்து வருகிறது. பொதுத்துறையில் அரியலூரில் ரூபாய் 30 கோடி அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிமெண்ட் தொழிற்சாலை பெரிய செவலையில் நிறுவப்பட்டுள்ள கூட்டுறவு சர்க்கரைஆலை தனியார் துறையிலும் பல புது தொழிற்சாலைகள் இவ்வரசின் சீரிய தொழில் முயற்சிகளால் ஏற்பட்ட பலன்களில் சில.

அந்நியச்செலாவணியை ஈட்டித்தந்திடும் தமிழ்நாடு கனிம நிறுவனம், மற்றும் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் ஆகியன மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய சிந்தனையின் விளைவாய் தமிழகம் பெற்றுள்ள சிறந்த நிறுவனங்களாகும்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, செங்கல்பட்டு, கோவை, மதுரை, தர்மபுரி மாவட்டங்களில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், கூட்டுறவு பஞ்சாலைகளும் துவங்கிட ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் முயற்சிக்கப்படும்.

ஏற்கனவே25,000 கதிர்களைக் கொண்டதாய் இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலைகளை 50000 கதிர்களைக் கொண்டதாய் உயர்த்திட விரிவான திட்டங்கள் செயல்முறையில் உள்ளன.

திருச்சி மாவட்டம் புகலூரில் உலக வங்கியின் உதவியுடன் ரூபாய் 180 கோடி அளவில் நிறுவப்பட உள்ள செய்தித்தாள் காகிதத் தொழிற்சாலை இவ்வரசின் சீரிய முயற்சியின் சின்னமாய் விளங்கும்.

ரூபாய் 40 கோடி செலவில் 1,5000 டன் உற்பத்தி திறனுடைய பாலியஸ்டர் இழைநூல் தயாரிக்கும் தொழிற்சாலை, ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்புடன் 15 கோடி செலவில் ஏற்பட உள்ள வெடி மருந்துதொழிற்சாலை, இரசாயன தொழிற்களைப் பெருக்கிட கடலூரில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் இணையம், உப்பு, உப்புசார்ந்த தொழில்களை வளர்த்திட தூத்

துக்குடியில் ஏற்படுத்தப்பட உள்ள இணையம் ( Salt Complex) முகவை மாவட்டம் சிவகெங்கைப் பகுதியில் மண்டிக் கிடக்கும் கிராபைட் கனிமத்தை பயன்படுத்தி அந்நியச் செலா வணியை ஈட்டக்கூடிய ரூபாய் 6 கோடி அளவிலுள்ள தொழில் திட்டம், எலக்ட்ரானிக் துறையில் வேகமான வளர்ச்சிக் காண ஏற்படுத்தப்பட்டுள்ள எலக்ட்ரானிக் கார்ப்பரேசன் ஆகியன விரைவான தொழில் வளர்ச்சிக்கு தமிழக அரசின் புதுமுயற்சியாகும்.

மத்திய அரசின் தொழில் முத லீடு 10 சதவிதத்திலிருந்து 4 சத வீதமாக கடந்த 10 ஆண்டு களில் குறைந்துள்ளதை போக்கி தமிழகத்திற்குரிய முதலீடும், மூலப் பொருட்கள் வழங்கிடும் அளவில் முன்னேற்றம் உரிய பங் கும் உண்டாக்கித்தர மத்திய அரசை தொடர்ந்து இவ்வரசு வற்புறுத்தும்.

மின்சார உற்பத்தியில் தீவிர கவனமும், மின் உற்பத்திப் பெருக்கமும், இருந்தால்தான் தொழில் வளர்ச்சியின் இலக் கினை எட்ட முடியும் என்பதை இவ்வரசு உணர்ந்துள்ளது. தொழில் வளர்ச்சிக்கு மிக அடிப் படை தேவையின் மின் உற்பத் தியை பெருக்கிட, இத்துறையில் வரும் ஐந்து ஆண்டுகளில் சுமார் ரூபாய் 1,022 கோடி (ரூபாய் ஆயிரத்து இருபத்து இரண்டு கோடி) முதலீடு செய்திட இவ் வரசு தீர்மானித்துள்ளது. தமி ழக அரசின் தொலைநோக்குப் பார்வைக்கும், தீவிர தொழில் வளர்ச்சித் திட்டத்துக்கும் இது சீரிய சான்றாகும்.

தமிழகத்தில் தொழில் வளம் பெருக்கிட, தொழில் அமைதி யைத் தொடர்ந்து நிலைநாட்ட தொழிற் சங்கங்களையும், தொழிற்சங்க தலைவர்களை யும் தொழிலாளர்களையும் இச் சமயத்தில் வேண்டிக் கொள்வது எனது கடமையாகும்.

மாநில அரசு, மத்திய அரசு, தொழில் முனைவோர், தொழி லாளர்கள் தொழில் வளர்ச்சி நிறுவனங்கள், வங்கிகள், இப்படி அனைவரும் ஒன்றுபட்டு உழைப் போம். புதியதோர் தொழில் உலகம் காண்போம்.

( தமிழ்நாடு மாண்புமிகு. தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 21.12.80 அன்று 'வளரும் தமி ழகம்' என்ற நிகழ்ச்சியில் 'தொழில் வளர்ச்சியில் நமது இலக்கு' என்ற தலைப்பில் வானொலியில் ஆற்றிய உரை)

# நூல் நயம்

### டாக்டர் நாவலர் மணிவிழா மலர்

(மலர்ப் பொறுப்பாசிரியர் : புலவர் இளஞ்செழியன்)

நடமாடும் பல்கலைக் கழக மாம் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் மணிவிழா மலரில் (1980), மனத்தைத் தொடும் வண்ணம் மணிமணியான கட்டுரைகள்-கவிதைகள்-செய்திகள் இடம் பெற்றுள்ளன.

டாக்டர் நாவலர் அவர் களின் அருமை பெருமைகளை, சிறப்பியல்புகளை எல்லாம் சிந்தைக்கு விருந்தூட்டும் வண்ணம் படைத்திருக்கி றார்கள் பல்துறை அறிஞர்கள்.

நாவலர் வாழ்க்கைப்பேரேடு, சிந்துபாடும் சிற்றாறுகள், வெண்பாவில் நாவலரை பண்பாடுவோம் - போன்ற பகுதிகள் டாக்டர் நாவலர் அவர்களைப் பல கோணங் களில் படம் பிடிக்கின்றன.

கண்ணைக் கவரும் வண் ணத்தில் அமைந்துள்ள இம் மலரை, அழகிய முறையில் தொகுத்துள்ளார் புலவர் இளஞ்செழியன்.

### உழைப்பே செல்வம்

(ஆசிரியர்: டி.என். சுகி. சுப்பிர மணியன், வெளியிட்டோர் : அமிழ்தம் பதிப்பகம், நார்த் தாம்பூண்டி, திருவண்ணா மலை வட்டம், (வ. ஆ.) 606809 விலை ரு. 4.)

நாளையத் தலைமுறைக ளான இன்றைய குழந்தைகள் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிட நாம் என்ன செய்ய வேண்டும்? என்ற வினாவுக்குவிடையாக விளங்கு கிறது இந்நூல்.

உழைப்பு, நாட்டுப்பற்று, காலத்தை வீணாக்காமை போன்ற நற்பண்புகளைக் கடைப்பிடிக்கும் வகையில், ஒவ்வொரு கட்டுரையும் அறி வுறுத்துகின்றது. எளிய இனிய நடையில், எண்ணத்தை ஈர்க் கின்றது இந்நூல்.

### கண் சிமிட்டும் கல்லறைகள்

(ஆசிரியர் : பாப்ரியா.
வெளியீடு: அகரம்,
2, சிவன் கோவில்
தெற்குத் தெரு,
சிவகங்கை. விலை: ரூ.5)

இக்கவிதைத் தொகுப்பில், எண்ணத்தில் பூத்த எழில் மலர்கள் ஏராளம். சில மணம் தருகின்றன, சில மனத்தைக் கவர்கின்றன.

'ஆகாய விழிகளிலிருந்து
மண்ணுக்கு விளையாட
அனாதைகளாய் வரும்
நீர்மொட்டு பொம்மைகள்'

என்று கண்ணீரைக் குறிப் பிடும் கவிஞர், 'இதயச் சத்தி ரங்களில் தங்கும் வழிப்போக் கன்' என்று காதலைக் குறிப் பிடுகிறார். இதைப்போல நிறைய கவிதைகள் - புதுக் கவிதைகள் இந்நூல் முழுவதும் விரவி, சிந்தைக்கு விருந்தூட்டு கின்றன.

### சதுர நிலா

(ஆசிரியர்: பி. எல். இராசேந் திரன்,
வெளியீடு: பூவழகி பதிப்பகம், 31, சீனிவாசப் பெருமாள் சன்னதி தெரு, சென்னை-600014. விலை: ரூ.9.50)

கிராமத்தை மையமாக வைத்துப் பின்னப்பட்டிருக் கிறது இந்நாவல். அதுவும் தஞ்சை மண்ணின் மணம் நாவல் முழுவதும் மணக்கிறது.

'என்னுடைய வாழ்க்கை நகர்ப் புறத்தைச் சார்ந்திருந் தாலும், வேட்கை கிராமப் புறத்திலேதான்' என்று இதன் ஆசிரியரே குறிப்பிடுவ திலிருந்து, இந்நாவல் கிராமி யச் சூழலில் அமைந்திருப் பதை நாம் நன்குணரலாம்.

நவநீதம், விசாலம், மோகனா, முத்துசாமி இவர் களோடு நம்மை ஒன்ற வைக் கும் ஆசிரியரின் திறமை நாவல் முழுவதும் பளிச்சிடு கிறது. புதிய நடையும், புது மைத் தலைப்பும் நம்மைக் கவர்கிறது.

—பி. வி. கிரி

# தமிழ்நாட்டு விளையாட்டுகள்



வாழ்வியல் விளக்கும் பண்பாட்டுக் கூறுகளில் விளையாட்டும் ஒன்றாகும். விளையாட்டினை வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களமென்றும் கூறலாம். இக்களத்தின் வழியே அவர்தம் வாழ்வியலை ஊடுருவி நோக்குவதும் எளிதெனலாம்.

ஒரு நிலத்தினைச் சார்ந்த விளையாட்டுகள் தட்ப வெப்ப நிலையினைப் பொறுத்தும், நிலவியல் சூழலடிப்படையிலும் மாறுபடக்கூடும். இணங்க, தமிழர்தம் விளையாட்டுகளை ஆராயப் புகுந்தால் தமிழருக்கென்றே இனங்கண்டு கொள்ளக்கூடிய விளையாட்டுகளை உணர்ந்து கொள்ளுதல் இயலும்.

விளையாட்டுகளைக் கீழ்க் கண்டவாறு வகைப் படுத்தலாம்: 1. வீர விளையாட்டு 2. உடல் திறன் விளையாட்டு 3. அறிவுத் திறன் விளையாட்டு 4. விழாக் காலத்து விளையாட்டு என்பவை யாகும்.

**வீர விளையாட்டு:**

தமிழர்களுக்கு அன்றிலிருந்து இன்றுவரை வீரத்திற்குப் பஞ்சம் ஏற்பட்டதில்லை. ஆதலால் வீர விளையாட்டிற்கும் குறைவில்லை எனலாம். உயிரினைப் பொருட்டாக மதிக்காமல் துணிந்து செயல்படுமியல்பு இத்தகைய விளையாட்டுக்களில் இடம் பெறுகிறது.

**சல்லிக்கட்டு :**

தமிழ்நாட்டுப்புறத்து ஆடவர்களால் விரும்பிப் பங்கேற்கப்படும் இவ்விளையாட்டு தமிழர்தம் நாளான பொங்கல் நாளையொட்டி நடைபெறும். வாடிவாசலில் முரட்டுக் காளையினைத் தனித்துநின்று அடக்குதல் இவ்விளையாட்டின் நோக்கமாகும்.

இலக்கியத்தில் சுட்டப்படும் ஏறுதழுவுதலும் சல்லிக்கட்டும் ஒன்று எனலாம். ஆனால் மேனாட்டுக் காளைப் போர் சண்டை சல்லிக்கட்டும் இணைத்துப் பார்க்கக்கூடியதாய் இல்லை. ஏனெனில், காளைப் போர் சண்டை இறுதியில் காளைகள் கொல்லப் படுகின்றன. அடக்குதல் என்ற செய்கை மட்டுமே இடம்பெறுவதால் சல்லிக்கட்டினைத் தமிழருக்கேயுரிய விளையாட்டெனலாம்.

**சிலம்பம் :**

இதனைப் பயிற்சி நிறைந்த விளையாட்டெனக் கூறலாம். இப் பயிற்சியினைத் தருபவர் வழக்கில் சிலம்ப வாத்தியார் எனப்படுவார். நீளமான கம்பினைப் பயன்படுத்தி விளையாடப் பெறும் இவ்விளையாட்டு, எதிரிகள் பலரைத் தாக்குவதற்கும், தற்காப்பிற்கும் பயன்படுவதாயுள்ளது. மேனாட்டில் கம்பினை வைத்து விளையாடும் முறை ( Quater Staff ) இருந்தாலும் கம்பின் நீளம் குறைவாக இருக்கிறது. கால் அடியெடுத்து வைக்கும் முறை, கம்பு வீசுந்திறன், விரைந்து செயல்படும் தன்மை போன்றவை இவ்விளையாட்டின் அடிப்படைத் தேவை எனலாம்.

**புலிவேடம் :**

சிலம்பப் பயிற்சி பெற்றவரிடையே நிகழும் போட்டியாட்டம் புலிவேடம் எனலாம். ஒரு கிராமத்தில் சிலம்பப் பயிற்சி பெற்ற ஒருவரை எவராலும் வெல்ல இயலாது என்ற நிலையில் அவர் விழா நாளின்போது புலிவேடமிட்டு ஒற்றை வாலினைக் கட்டிக் கொள்வார். அவ்வட்டாரத்திலேயே அவரை எதிர்க்க எவருமில்லையென்றால் இரட்டை வாலினைக் கட்டிக் கொள்ளுதலும் உண்டு. அவருடன் போட்டியில் ஈடுபடுபவர் அவரை வென்றாகவேண்டும். குறிப்பாகக் கூறுமிடத்து வீரத்தினைப் புலப்படுத்துவதே புலிவேடத்தின் நோக்கமெனலாம்.

**பாரிவேட்டை :**

சிவராத்திரியின் மறுநாளன்று வேட்டைக்குக் கிளம்புவர். கொடிய விலங்குகளுடன் போராடி அவைகளைக் கொன்று வீரத்தினை நிலை நாட்டுவதே பாரி வேட்டையென்பர். பழைய வேட்டை வினையின் எச்சமெனக் கூறலாம்.

**உடல்திறன் விளையாட்டு**

'கபடி' என்ற பெயரில் தேசிய விளையாட்டாகத் திகழும் 'சடுகுடு' தமிழர்களுக்குரிய விளையாட்டென்று கூறுவதில் மிகையொன்றுமில்லை. ஏனெனில் இவ்விளையாட்டின் தோற்றத்திற்குப் பண்டைத் தமிழரசர்களின் நிரை கவர்தலும், நிரை மீட்டலும் என்ற போர் செய்கையே காரணமெனத் தெரிகிறது.

**மாப்பிள்ளைக்கல்**

இதனை மாப்பிள்ளைக்கல் எனவும் அழைப்பர். இது ஒரு திறன் சோதிக்கும் ஆட்டமாகும். உடல் பலம் மிகுந்த ஒருவர்க்குத் தன் பெண்ணினைக் கொடுக்க நினைப்பவர் இப்போட்டியினைத் துவக்குவர். ஊரின் நடுவே பொதுமன்றத்தில் பெரியகல் வைக்கப்பட்டிருக்கும். அதனைத்

**—இரா. பாலசுப்பிரமணியம்,**
**உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்**
**சென்னை-**

தூக்கித் தலைக்கு மேலே உயர்த்திப் பிடித்தவர் வெற்றிபெற்றவராகக் கருதப்படுவார்.

**ஓட்டம் :**

புதிதாக மணம் புரிந்தவர் பெண்ணின் வீட்டிற்கு வரும் நாளில் இப்போட்டி விளையாட்டு நடத்தப்பெறும். அவ்வூரிலேயே விரைந்து ஓடுபவர்க்கும், மணமகனுக்குமிடையில் இப்போட்டி நடைபெறும். தற்கால ஓட்டப் பந்தயத்துடன் இணைத்துப் பார்க்கலாம்.

**அறிவுத்திறன் விளையாட்டு**

**கட்டம் :**





இரண்டுபேர் சேர்ந்து விளையாடக்கூடிய இவ்விளையாட்டில் படத்தில் காட்டியுள்ளதுபோன்று கட்டங்கள் வரையப்பட்டிருக்கும். தங்கள் தங்கள் காய்களை ஒரே நேர்கோட்டிற்கு நகர்த்தி வர அறிவுத்திறன் பயன்படுத்தப்படுகிறது. படைகளை நகர்த்திச் செல்லுமியல்பு இவ்விளையாட்டில் பிரதிபலிப்பதால் போரின் செய்கை இவ்விளையாட்டின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

**பதினைந்தாம் புலி :**

படத்தில் காட்டியுள்ளது போன்று கட்டம் வரையப்பட்டிருக்கும். இருவர் மட்டுமே இவ்விளையாட்டில் பங்கு கொள்ளுதல் இயலும். ஒருவர் ஆடாகவும், ஒருவர் புலியாகவும் இருப்பார். ஆடாக இருப்பவர்க்குப் பதினைந்து காய்களும், புலியாக இருப்பவர்க்கு மூன்று காய்களும் கொடுக்கப்பட்டிருக்கும்.

புலியாக இருப்பவர் ஆடாக இருப்பவரின் காய்களை வெட்ட (நீக்க) முயலுவார். ஆடாக இருப்பவர் புலியின் காய்களினால் வெட்டுப்படாமல், அக் காய்களை நகரவிடாமல்அடைக்க முற்படுவர்.



குறிஞ்சி நிலத்தினைச் சார்ந்த புலிக்கும் முல்லை நிலத்தினைச் சார்ந்த ஆட்டிற்குமிடையே எழுந்த வேட்டுவினையே இவ் விளையாட்டின் தோற்றத்திற்குக் காரணமாகும். இவ்வகையில் இவ்விளையாட்டினையும் தமிழுக்குரிய ஆட்டமென்று கருதலாம்.

**நட்சத்திர விளையாட்டு :**

ஒருவரே பங்குகொள்ளும் இவ் விளையாட்டில் அறிவுத்திறன் சோதிக்கப்படுகிறது. காய்களை



வைப்பதற்கெனப் பத்துப் புள்ளிகள் இருக்கும். இவைகளில் ஒன்பது காய்களை நகர்த்தி இறுதியில் ஒரு காயினை வெட்டுப் படாமல் வைத்திருக்க வேண்டும். ஒருவரே பங்குகொள்ளுதல் இயலும்.

**விழாக் காலத்து விளையாட்டுகள்**

**பானையுடைத்தல் :**

இரு மூங்கில் கழைகளுக் கிடையே கயிறு கட்டப்பட்டிருக்கும் போட்டியில் கலந்துகொள்வோர், கண்கட்டப்பட்ட நிலையில் குறிபார்த்துப் பானையினை அடிக்கவேண்டும். சுற்றுப்புறச் சூழ்நிலைகளை உணர்ந்து தந்திரமாகச் செயல்படுதல் வேண்டும். போரில் கண்ணிழந்த நிலையில் செயல்படுமியல்பினைப் பிரதிபலிப்பது இவ்விளையாட்டின் தோற்றமாக இருக்கலாம்.

**உரிப்பானை விளையாட்டு :**

பட்டைகள் உரிக்கப்பட்ட மரத்தின் உச்சியில் பானையும் அதனுள் பரிசுப்பொருளும் வைக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும் உதியமரத்தின் பட்டைகளையே உரிப்பர். உரிக்கப்பட்ட மரத்தில் விளக்கெண்ணெய்யும் தடவப்பட்டிருக்கும். போட்டியில் கலந்து கொள்பவர் கீழே விழுந்துவிடாமல் மரத்தின் உச்சியினைச் சென்றடைந்து பரிசுப்பொருளினை எடுத்துத் திரும்புதல் வேண்டும்.

**சூது விளையாட்டு :**

பொம்மைச்சீட்டு, திரிக்குத்து, மூணுகட்டை போன்ற விளையாட்டுகள் சூதின் தன்மையாக இருந்தாலும் அறிவுத்திறன் சார்ந்த வாய்ப்புநிலை விளையாட்டாகவும் கருத இடமுண்டு.

**மகளிர் விளையாட்டுகள் :**

**தாயம் :**

தமிழக மகளிர் விரும்பியேற்கும் விளையாட்டுகளில் தாயமும் ஒன்று எனலாம். தாயத்தில் கட்டம் வரைந்து விளையாடப்படுமியல்பு காணப்படுகிறது. கட்டத்தின் அமைப்புப் படத்தில் காட்டியிருப்பது போன்று பல








வேறு வகைகளில் இருக்கக் காணலாம். மகளிர் விளையாடப்படுவதெனினும் இவ்விளையாட்டின் தோற்றத்திற்குப் போரின் சாயல்கள் காரணமாயிருந்திருக்கின்றன. அஃதாவது வெட்டுதல் அல்லது குத்துதல் ( Cutting ) என்ற செய்கை இடம் பெறுகிறது. தாயக்கட்டத்தின் மலையிலிருந்தால் வெட்டுதல் இயலாது என்ற நிலையும் காணப்படுகிறது. இவைகளை வைத்து ஆராயுமிடத்துப் படைமேற் சென்ற வீரர்கள் படைநகர்த்தும் திறன் இருந்ததால் கட்டம் போன்ற விளையாட்டுகளில் காயினை நகர்த்தி விளையாடியதாகவும், படைமேற் செல்லாவிடினும் வீரர்களின் மூலம் போரின் நிலையினை உணர்ந்த மகளிர் அறிவுத்திறன்கொண்டு நகர்த்தாமல் சோழியின் விழும் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு நகர்த்தலாயினர் எனக் கூறலாம்.

**பல்லாங்குழி :**

பதினான்கு குழிகளில், குழிக்கு ஐந்து கற்கள் வீதம் நிறைத்து விளையாடப்பெறும் இவ்வாட்ட வகை மகளிர்க்குரிய விளையாட்டெனலாம். இதனைப் பாண்டியாட்டம் எனவும் பொதுப்படக் கூறுதலுண்டு. அவ்வாறெனில் பாண்டிய நாட்டில் தோன்றிய ஆட்டமாகவும் இருக்கக்கூடும்.




## வைணவ இலக்கியங்கள்

| | ஆசிரியர்கள் | நூல்கள் |
|---|---|---|
| 1 | பொய்கையார் | முதல் திருவந்தாதி |
| 2 | பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி |
| 3 | பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி |
| 4 | திருப்பாணாழ்வார் | அமலனாதிபிரான்-பதிகம் |
| 5 | திருமழிசை ஆழ்வார் | திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி |
| 6 | நம்மாழ்வார் | திருஆசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி |
| 7 | மதுரகவியாழ்வார் | கண்ணிநுண்சிறுத்தாம்பு-பாடல் |
| 8 | பெரியாழ்வார் | பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு |
| 9 | ஆண்டாள் | நாச்சியார் திருமொழி திருப்பாவை |
| 10 | திருமங்கை ஆழ்வார் | பெரிய திருமடல் போன்ற ஆறு நூல்கள் |
| 11 | தொண்டரடிப் பொடி ஆழ்வார் | திருமாலை, திருப்பள்ளியெழுச்சி |
| 12 | குலசேகர ஆழ்வார் | பெருமாள் திருமொழி. |

பசுப்பாண்டி, சரிப்பாண்டி, எதிர்ப்பாண்டி, காசிப்பாண்டி, இராஜாப்பாண்டி சீதைப்பாண்டி போன்றவை இதன் ஆட்டவகைகளாம். இவற்றில் சீதைப்பாண்டியில் ஒருவரும், இராஜாப்பாண்டியில் மூவரும் கலந்துகொள்ளலாம்.

**தட்டாங்கல் :**

தமிழ் இலக்கியத்தில் கழங்காட்டம் என்று சிறப்பிக்கப்படும் ஆட்ட வகையே இன்றைய தட்டாங்கல் ஆட்டம் எனலாம். சிறு கூழாங்கற்களை உயரத்தூக்கிப் போட்டுப் பின் பிடிப்பது இதன் ஆடுமுறையாகும். இதனை வாய்ப்புநிலை சார்ந்த உடல் திறன் விளையாட்டாகக் கருதலாம்.

**மஞ்சள் நீர் தெளித்தல் :**

பண்டைத் தமிழரின் நீர்விளையாட்டு என்ற நிலையின் எச்சமாக இதனைக் கருதலாம். விழா நாளில், தான் விரும்பியேற்கப் போகும் கணவன்மீது மஞ்சள் சாயங்கலந்த நீரினைத் தெளித்து மகிழ்வர்.

**சிறுவர், சிறுமியர் விளையாட்டு :**

தொடுதல் செய்கையான விளையாட்டுகள், பிடித்தல் செய்கையான விளையாட்டுகள், தேடுதல் தொடர்பான விளையாட்டுகள், போட்டி விளையாட்டுகள் போலச் செய்யும் விளையாட்டுகள் எனப் பலவாறு பிரிக்கலாம். இவர்தம் விளையாட்டுகள் கால வளர்ச்சியின் விளைவால் மாற்றம் காணவில்லையெனலாம். எனவே, பண்டைப் பண்பாட்டினைப் பற்றி ஆராய்வதற்கு இவர்தம் விளையாட்டுகள் பயன்படக்கூடும்.



# முடம் என்பது திருத்த முடிவது முயற்சியே அதற்கு முதலீடு

ஐக்கிய நாடுகளின் பொதுக்குழு 1981-ஆம் ஆண்டினை உலக ஊனமுற்றோர் ஆண்டாக அறிவித்துள்ளது. அவ்வறிவிப்பில் இந்தியா இணைந்து கையெழுத்திட்டுள்ளது. ஆகவே, ஊனமுற்றோர் ஆண்டை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கும், ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான பல செயல்முறைத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதற்கும் மத்திய, மாநில அரசுகள் வழி வகுத்து வருகின்றன.

**உலக ஊனமுற்றோர் ஆண்டின் இலட்சியங்கள்:**

(அ) ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பிரச்சினையின்மீது மக்களின் கவனத்தைத் திருப்புவதும் ——

(ஆ) ஊனமுற்றோருக்கு வாழ்க்கையில் சம வாய்ப்புக்களும், வசதிகளும் வழங்கி அவர்கள் முன்னேற வழி வகுப்பதும்——

(இ) ஊனமுற்றோருக்கு கல்வி, தொழில்பயிற்சி வேலை வாய்ப்பு, சுயவேலை வாய்ப்பிற்குரிய வசதிகள், மருத்துவ வசதிகளை விரிவாக்குவதும்; அவர்களுக்கான தனிக் கல்வி நிலையங்களும், தொழில் கூடங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் ஆரம்பிப்பதும்; அவர்களுக்குச் சிறப்புச் சலுகைகளும் முன்னுரிமைகளும் வழங்குவதும் அதன் மூலம் மற்றவர்களைப் போல் அவர்களும் தன் காலிலேயே நின்று சுயமரியாதையுடன் வாழ வழி வகுப்பதும்——

(ஈ) ஊனமுற்றோரிடம் மறைந்து கிடக்கும் திறமைகளைப் பொதுமக்களும், தொழில் அதிபர்களும், அறியச் செய்வதும், அவர்களது திறமைகளை வளர்க்க உதவி அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கத் தூண்டுவதும்——

(உ) ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணியில் சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியினரை குறிப்பாக சேவை நிறுவனங்களைத் தூண்டுவதும் ஊக்குவிப்பதும் ஆகும்.

**ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக தமிழக அரசு கடந்த 4 ஆண்டுகளில் ஆற்றியிருக்கும் பணி:**

(அ) மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டவர்கள் ...2142





| | | |
|---|---|---|
| (ஆ) | காது கேட்கும் கருவிகள் வழங்கப் பட்டவர்கள் | ...1167 |
| (இ) | பெட்டிக்கடை வைக்க உதவி பெற்றவர்கள் | ... 221 |
| (ஈ) | நிரந்தர வேலை பெறுமுன் தொழில் பழக அமர்த்தப்பட்ட வர்கள். | ... 194 |
| (உ) | கல்வி உதவித் தொகை பெற்ற வர்கள் | ...2353 |
| (ஊ) | தொழில் பயிற்சி பெற்றவர்கள் | ... 543 |
| (எ) | பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | ... 53 |
| (ஏ) | சுய தொழில் செய்ய மானியம் பெற்றவர்கள் | ... 71 |
| (ஐ) | செயற்கைக் கால் உறுப்புக்கள் பெறும் குழந்தைகள் | ...1000 |

**ஆரம்பிக்கப்பட்ட மறுவாழ்வு நிலையம்:**

கண் தெரியாத பெண்களுக்குப் பயிற்சி அளித்து வேலை அளிக்கும் ஊனமுற்ற பெண்கள் மறுவாழ்வு நிலையம் ஒன்று 1978-ல் சென்னையில் ஆரம்பிக்க பட்டது. இதன் மூலம் 60 பெண்கள் பயிற்சியும் பணியும் அளிக்கப்பட்டுள்ளனர்.

**ஆரம்பிக்கப்பட இருக்கும் நிறுவனங்கள்:**

(அ) மனநோய் வாய்ப்பட்டோர் நலன் பேணும் நிலையம்.

(ஆ) மாதந்தோறும் 20 ஊனமுற்றவர்களை ஆய்வு செய்து அவர்களைப் பயிற்சி பணி அல்லது தொழிலில் அமர்த்தும் பிராந்திய மறுவாழ்வு நிலையம்.

(இ) கண் தெரியாதவர்கள் 120 பேருக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி அளித்து துணி உற்பத்தி மற்றும் கூட்டுறவுச் சங்கம் தொடங்குதல்.

**உலக ஊனமுற்றோர் ஆண்டான 1981-ல் சிறப்புத் திட்டங்கள்:**

ஊனமுற்றோருக்கு கல்வி, தொழில் பயிற்சி, வேலை வாய்ப்பு, சுயவேலை வாய்ப்பு, பிற வசதிகளையும், வாய்ப்புக்களையும் விரிவாக்கி அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பல சிறப்புத் திட்டங்கள் உருவாக இருக்கின்றன.

**சமுதாயத்தின் கடமை:**

ஊனமுற்றோர் பிரச்சினை அளவிலும், பரிமாணத்திலும் பெரியது. அரசு மட்டுமே அப்பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க முடியாது. பொதுமக்களும், அதற்கு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

(அ) தொழிலதிபர்கள் ஊனமுற்றோரைக் கணிசமான அளவில் வேலையில் அமர்த்த முன் வரவேண்டும்.

(ஆ) வங்கிகளும், நிதிவழங்கும் அரசு நிறுவனங்களும் ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்பில் ஈடுபடுவதற்கும், தொழில் தொடங்குவதற்கும், தாராளமாக நிதி உதவி செய்ய முன் வர வேண்டும்.

(இ) தனியார் நிலையங்களும், சேவை நிறுவனங்களும், ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக மேலும் அன்புடனும் முழுமையாகவும் ஈடுபட முன் வரவேண்டும.

(ஈ) பொதுமக்களில் ஒவ்வொருவரும் ஊனமுற்றோரின் பிரச்சினையை அனுதாபத்துடன் அணுகவேண்டும். அவர்களின் மறுவாழ்வுக்குத் தங்களால் இயன்றது அனைத்தையும் செய்ய முன் வர வேண்டும்.

உறுப்புக்கள் மனிதனை உருவாக்குவதில்லை;
உணர்வுகளே அவனை நிறைவாக்குகின்றன,
ஊனமுற்றோர் துயர் காணா உளமென்ன உளமே
உருகியவர்க்கு உதவுவதால் உண்டாகும் வளமே!



# நான்மாடக் கூடலில் நடைபெற்ற தமிழ்விழா

எண்ணிற் சிறந்ததுந் தமிழ்
எழுத்திற் சிறந்ததுந் தமிழ்
மண்ணிற் பழையதுந் தமிழ்
மாசற் றொளிர்வதுந் தமிழ்
பண்ணிற் சிறந்ததுந் தமிழ்
பாரிற் பரந்ததுந் தமிழ்
கண்ணிற் சிறந்ததுந் தமிழ்
கன்னிமை சான்றதுந் தமிழ்

—எனப் பலவாறும் புகழ் மகுடம் சூட்டத்தக்க நமது தாயாம் தமிழுக்கு மேலும் சிறப்புச் சேர்த்திடும் விதத்திலே அமைந்திருந்தது கூடல் மாநகராம் மதுரையிலே கூடிய ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு.

மார்கழித் திங்கள் 20ஆம்நாள் முதல் 27ஆம் நாள் வரை நடைபெற்ற இம் மாநாட்டு நாட்களில் சங்கத் தமிழ் வளர்த்த மதுரை தங்கம் போல் ஒளிர்வதாய் எழிற்கோலம் பூண்டிருந்தது.

சித்திரைத் திருவிழா நாளிலேதான் மதுரையிலே மக்கள்வெள்ளம் அலைமோதும். ஆனால், இந்தப் பனிபெய்யும் மார்கழியிலே மற்றொரு சித்திரைத் திருவிழாவா என வியக்கும்படி எங்கு நோக்கினாலும் இளைஞர், முதியோர், அரும்புச் சிறுவர்-சிறுமியர், பாசத் தாய்மார்கள் கூட்டம். எல்லாருக்கும் இன்பத் தமிழ் நலத்தின்மேல் நாட்டம்.

மாநாட்டையொட்டி, பத்து இலட்சத்திற்கு மேலானோர் வருகை தந்திருந்தனர் வண்டமிழ் வளர்த்த வளமார் மதுரைக்கு!

இன்பத் தமிழ் நாட்டார் மட்டுமே அல்ல அவர்கள். 'இனிமை தமிழ் மொழி எமது; எமக்கு இன்பந்தரும்படி வாய்த்த நல்லமுது' என, நம்போன்ற நன்னோக்குடைய அயல் நாட்டாரும் அணி அணியாய் வருகை தந்திருந்தார்கள்.

இலண்டன் மாநகர், செக்கோசுலோவேகியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, சீனா, இந்தோனேஷியா, ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், செனகல், இத்தாலி, மேற்கு ஜெர்மனி, மொரீஷியஸ் போன்ற பல்வேறு நாட்டினரும் மாநாட்டிலே பங்கேற்க மனமுவந்து வந்திருந்தனர். இப்படி வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் எண்ணிக்கைமட்டும் ஏறத்தாழ 700 ஆகும்.

அவர்களைத் தவிர, அங்கெல்லாமிருந்து பார்வையாளராக வந்து பங்கேற்றோரின் எண்ணிக்கை மூவாயிரத்திற்கு மேலிருக்கும்.

மாநாட்டினையொட்டி — தமிழ்ப் பண்பாடு, மொழி வளர்ச்சி, இலக்கியம் , கலை போன்றவை குறித்த கருத்தரங்கம் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலே நடைபெற்றது. சுமார் 3,500 தமிழாசிரியர்கள் இதிலே பார்வையாளராகக் கலந்துகொண்டு விவாதம் நடத்தினர். அது தவிர ,தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து அவர்களே பல்வேறு பொருட்கள் குறித்தும் ஆராய்ச்சியிலீடுபட்டனர்.

காமராசர் பல்கலைக் கழகக் கட்டிடங்கள் ஆறிலே நடைபெற்ற இந்த நிகழ்ச்சிதான் மாநாட்டிலேயே முக்கியத்துவம் வாய்ந்ததுபோல் பேசப்பட்டது.

முப்பதாயிரம் பேருக்கு மேல் அமரும்படி பந்தயத் திடலில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், இசைநிகழ்ச்சி, நாடகம், நடனநிகழ்ச்சி ஆகியவை நாள்தோறும் நடைபெற்றன.

அத்தனை நாட்களும் மதுரைக் கல்லூரி, புனிதமேரி பள்ளி அரங்கம், ராஜா முத்தையா மன்றம் போன்ற இடங்களில் படக்காட்சிகள் உள்ளிட்ட பலதரப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தமுக்கம் மைதானத்திலே நிர்மாணிக்கப்பட்டிருந்த கண்காட்சி, வருகை தந்தோரனைவரையும் வாய் பிளந்து வியக்க வைத்தது! தமுக்கம் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த அறநிலையத்துறை அரங்கம், பால்வள நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டிருந்த தங்கத் தாமரை, தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் வசீகரம் மிக்க வண்ணமயில், அகத்தியனமர்ந்து அருந்தமிழ் வளர்த்திட்ட பொதிகை-அவற்றிடையே நற்றமிழ் நாட்டு நானி

லப் பாங்கு ஆகியவை அமைக்கப்பட்டு அழகு செய்தன.!

தமிழ்ப் பண்பாட்டு மையம், வனத்துறை, பொதுப்பணித்துறை, மருத்துவத்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், குடும்பநலத்துறை, பனைப் பொருள் கூட்டுறவுச் சங்கம், தொல்பொருள் ஆய்வுத்துறை, பூம்புகார் நிறுவனம் ஆகியவற்றின் சார்பில் அமைக்கப் பட்டிருந்த அரங்குகளும் அற்புதம் போல் காணப்பட்டன!

மதுரையைச் சேர்ந்த கோவலன்பொட்டலில் தோண்டியெடுக்கப்பட்ட சுமார் இரண்டாயிரம் ஆண்டுக்கு முந்திய மனித எலும்புக் கூடொன்று தொல் பொருள் ஆய்வுத்துறை அரங்கிலே இடம் பெற்றிருந்தது!

சுற்றுலாத்துறை அரங்கிலே சிறப்புற அமைக்கப்பட்டிருந்த 100அடி நீளமும், 100அடி அகலமும் கொண்ட தமிழகத்தின் மாதிரி அமைப்பானது காண்போர் தம் உள்ளத்தைக் கவர்ந்திழுப்பதாய் அமைந்திருந்தது. இந்தத் தமிழக அமைப்பில் மதுரை மீனாட்சியம்மன் கோயில் உள்ளிட்ட எட்டு சுற்றுலாத் தலங்கள் சித்திரிக்கப்பட்டுச் சிங்காரம் காட்டின.



தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறை, கைத்தறித்துறை, ஓவிய நுண்கலை அரங்கு போன்ற 18 துறைகள் சார்பான அரங்குகள் ஏறத்தாழ ஐம்பது இலட்சம் ரூபாய் செலவிலே பிரமாண்டமான அளவில் அமைக்கப்பட்டு அனைவரின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுவதாய் அமைந்திருந்தன.

மதுரை மாநகரின் முப்பது முக்கிய இடங்களிலே, தமிழ்மாநாட்டு நிகழ்ச்சிகளை எல்லாப் பகுதியினரும் கண்டு களித்திடும் விதத்திலே தொலைக் காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. மாலை 6 மணி முதல் இரவு 12 மணி வரை இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இயங்கின. அவற்றின் முன்னாலே கூடியிருந்தோர் உள்ளமெல்லாம் மயங்கின!

நடமாடும் மருத்துவ வண்டிகள், தீயணைப்பு வண்டிகள் யாவும் அத்தனை நாட்களும் நாணில் பூட்டிய அம்புபோல் தயார் நிலையிலே இருந்தன. போக்கு வரத்துக் கட்டுப்பாடு, மக்கள் நெரிசல் இவையறிந்து ஒழுங்கு செய்திட நகரின் 50 இடங்களிலே புதுவிதக் காமிராக்கள் வேறு!

பாதுகாப்புக்கென ஆண்களும் பெண்களுமான காவல்துறையினர் ஆங்காங்கே பம்பரமாய்ச் சுழன்று பாடுபட்ட வண்ணமிருந்தனர். மாணவச் செல்வங்களும் இவ்வகையில் அரும்பாடு பட்டனர்!

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில், மாநாடு நடைபெற்ற சனவரி 4 முதல் 10ஆம் நாள் வரை கலை நிகழ்ச்சிகள் பல நடத்தப்பட்டன.

மதுரைமாநகரின் வீதிகள் தோறும் வெள்ளம்போல் தமிழர் கூட்டம்! நம்பால் அன்புடைய நல்லிதயத்தார் கூட்டம்!

வீதிகள் தோறும் வண்ண விளக்குச் சரங்களின் வனப்பு! அலங்கார வளைவு! 'கடல்கடந்த தமிழரெலாம் உடன் பிறந்தார் தமைக் காண கூடலுக்கு வந்துள்ளார் கூடிடுவோம் ஒன்றாக' என்பன போன்ற உலகத் தமிழ் மாநாடு குறித்த அழகுச் சுவரொட்டிகளால் நகரச் சுவர்களில் நிறைவு! கல்வி நிறுவனச் சுவர்களிலே வள்ளுவன் செய் திருக்குறளில் அங்கொன்று இங்கொன்று! பூங்காக்களில், ரவுண்டானாக்களில் நீரூற்றுக்களின் நிமிர்வும், சிங்காரச் சரிவும்!

இதுமட்டுமா?

மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருமலை நாயக்கர் மகால், மாரியம்மன் கோயில், நீதிமன்றக் கட்டிடம், வேளாண்மைக்கல்லூரி, புகைவண்டி நிலையம், பேருந்து நிலையம், விமான நிலையம், எங்கு பார்த்தாலும் கண் வழிபுகுந்து கருத்தினில் நிறைந்திடும் ஒளி வெள்ளம்!

எங்கு நோக்கிடினும் பட்டுத் துகிலில் பளபளக்கும் உலகத் தமிழ் மாநாட்டுச் சின்னக்கொடி; மீன்கொடி!

மன்னர் திருமலை ஒலி-ஒளிக் காட்சி! 'குமரிக் கண்டம்' திரைப் படக் காட்சி!

இந்த உலகத் தமிழ் மாநாடு 'ஒரே ஒரு வாரம் தானா?' என்று மதுரை வாழ் மக்கள் இதயம் ஏங்கினர். உலகத் தமிழ் மாநாட்டை மதுரையம்பதியிலே நடத்தி ...'மதுரை மதுரையே! என தம் நகரின் புகழுயர்த்திய தமிழக அரசை, மாண்புமிகு முதல்வர் அவர்களை மனமார வாழ்த்தினர்!

—"ராஜு"





# நெஞ்சைக் கவர்ந்த நிறைவு நாள் விழா!

வங்கக்கடல் பெரிதா, வந்து கூடியுள்ள மக்கட் கடல் பெரிதா என்ற திகைப்பினை உண்டாக்குவதாக இருந்தது உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழா!

பந்தயத் திடலில் அமைக்கப்பட்டிருந்த வள்ளுவர் அரங்கில் (10-1-81) நடைபெற்ற இவ்விழாவில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பங்கேற்று அரிய தோர் உரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில்— மேதகு தமிழக ஆளுநர் சாதிக் அலி, மத்திய அமைச்சர்கள் திரு. ஆர். வெங்கட்ராமன், திரு. ஆர். வி. சாமிநாதன், முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம். பக்தவத்சலம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பார்வையாளர் பகுதியில் புலவர் குழு வினரும், பன்னாட்டுப் பிரதிநிதிகளும் மாண்பு மிகு இலங்கை அமைச்சர்கள் திரு. ராஜதுரை திரு. தொண்டைமான்,நாடாளுமன்ற உறுப்பி னர் திரு. அமிர்தலிங்கம் ஆகியோரும் கலை யுலகப் பிரமுகர்களும், அனைத்துக் கட்சி முன்னணியினரும் காணப்பட்டார்கள்.

'தமிழறிஞர் திருச்சங்கம் தமிழ்காணும் புதுச்சங்கம், கடைச் சங்கம் கண்ட கவின் மதுரை நகரிலே தமிழ்ச் சங்கம் காணத் தமிழர் களே திரண்டிடுவீர்!'-என்ற சுவரொட்டி வாசகத்திற்கேற்ப, பந்தயத் திடலில் கண் ணுக்கெட்டிய வரை மக்கள்! பாதிக்குப் பாதி தாய்மார்கள்! ஏறத்தாழ இருபத்தைந்து லட்சமிருக்கலாம்!

நிறைவுநாள் விழா மேடை வண்ணமலர்ச் சரங்களால் வசீகரமாக ஜோடிக்கப்பட்டி ருந்தது. ஒளி கக்கிய மின்விளக்குகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன.

7 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த் தோடு நிகழ்ச்சி தொடங்கியது.

## வரவேற்புரை

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவில் மாண்புமிகு செய்தி அற நிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

அப்போது அவர் தமது உரையில் குறிப் பிட்டதாவது :

"தமிழ்மீது கொண்டுள்ள அன்பைக் காட் டும் வகையில் நமது பிரதமர் அவர்கள் இந்த மாநாட்டிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க நாளன்று இந்தியாவின் பிரயாகையில் மூன்று மகாநதி களும் சங்கமித்ததைப் போல மதுரை மாநகரம் காட்சியளித்தது.

"இன்று குமரி முனையில் மூன்று கடல் களும் சங்கமித்த காட்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

"அங்கயற்கண்ணி ஆட்சி செலுத்தும் மதுரையில் - மனம்போல் மாங்கல்யம் என்ற வகையிலே - நல்லவர்கள் நல்லதை எண்ணி னால் நல்லது நடக்கும் என்ற விதத்தில், நம் முடைய அழைப்பை ஏற்று இந்த நிறைவு விழாவுக்கு வருகை தந்திருக்கும் இந்தியப் பிரதமர் அவர்களை வரவேற்பதில் பெருமைப் படுகிறோம்."

—இவ்வாறு மாண்புமிகு செய்தி - அற நிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம்.

பி.எல்.ராஜேந்திரன்



வீரப்பன் அவர்கள் தனது வரவேற்புரையிலே குறிப்பிட்டார்.

**முதல்வர் உரை**

தமிழ்த் தாயின் சிலையைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பேசியதாவது :

"இந்த மாநாட்டுக்கு வரவேண்டும் — வாழ்த்துக் கூற வேண்டும், தமிழக மக்களின் அன்பை அவர்கள் காண வேண்டும்-தமிழகம் அவரை எப்படி மதிக்கிறது என்பதைத் தொடர்வதற்காக மீண்டும் ஒரு நல்ல வாய்ப்பை அவர் காண வேண்டும் என்று விரும்பிய எங்கள் உள்ளத்தைப் புரிந்து கொண்டு தமிழுக்கு மரியாதை - உயர்வு -பாராட்டு என்ற வகையில் - இன்று எத்தனையோ வேலைகள் இருந்தாலும் உலகப் பிரச்சினைகள் இருந்தாலும்—

"தமிழகத்துக்கு வந்து தமிழ் மொழிக்குத் தர வேண்டிய மரியாதையைத் தரவேண்டும்-நடத்துபவர்களை - தமிழ் அறிஞர்களை வாழ்த்த வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற முனைப்போடு பிரதமர் அவர்கள் இன்று இங்கு கலந்து கொள்வதை எண்ணி எண்ணி நான் உள்ளம் பூரித்து மனநெகிழ்ச்சியோடு நின்று கொண்டிருக்கிறேன்.

"இது ஏதோ முகஸ்துதியாகவோ - ஏதோ பாராட்டுவதற்காகவோ சொல்கிற வார்த்தை அல்ல.

"அவர்கள் தாயாக இருப்பது மட்டுமின்றி இந்த நாட்டின் தலைவியாகவும் இருப்பதை எண்ணி நாம் பெருமைப்படுகின்றோம்.

"இந்த மாநாட்டுக்கு வந்தவர்கள் தமிழகம் பற்றித் தெரிந்து கொண்டு இருப்பார்கள். திரும்பிச் செல்லும்போது தமிழர்களின் பண்பாடு, கட்டுப்பாடு, அன்பு, பண்பு, விருந்தோம்பல் இவை அத்தனையையும் அவர்கள் உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டு செல்ல இருக்கிறார்கள். எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் தங்கள் நாட்டுக்கு சென்று அவர்கள் பேசப் போகிறார்கள்.

"நாங்கள் மாநாடு சென்றோம், பிரதமர் வந்தார்கள், அவர்களைப் பார்க்க விரும்பிய மக்கள் எவ்வளவு அடக்கமாக இருந்தார்கள். தொல்லை கொடுக்காமல்-துன்பம் ஏற்படுத்தாமல் எவ்வளவு ஒத்துழைத்தார்கள் என்பதை அங்கே போய் சொல்ல இருக்கிறார்கள்.

"நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். எத்தனை ஆயிரம் காவல் துறையினரைக் கொண்டு வந்து வைத்தாலும், நாம் நம்மைக்கட்டுப்படுத்திக் கொண்டால் ஒழிய வேறு எதுவும் நம்மைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை நீங்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளீர்கள்.

"இந்த ஒற்றுமை—கட்டுப்பாடு—கடமை உணர்வு நம்மிடம் இருக்கும் என்பதை நீங்கள் இன்றைய தினம் நமது மாண்புமிகு மரியாதைக்குரிய இந்தியப் பிரதம அமைச்சருக்கு உறுதிமொழியாகத் தந்தாக வேண்டும்.

"உங்களை நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

"தமிழகம் தன் கடமையைச் செய்வதில் பின் வாங்காது என்பதை நீங்கள் உங்கள் கர ஒலி மூலம் செய்து காட்ட வேண்டும்.

"எந்தக் காலத்திலும் பிரிவினைக்கு-வன்முறைக்கு தமிழ்நாடு இடம் கொடுக்காது என்பதை உங்கள் கையொலி மூலம் நீங்கள் எடுத்துக் காட்ட வேண்டும். (கூட்டத்தினர் கை ஒலி எழுப்பினார்கள்).

"நாம் ஒன்றே குலமாக, சாதி பிரச்சினை-மதபிரச்சினைகளைத் தூக்கி எறிந்து - நாம் ஒருமைப்பாடு உணர்வுக்கு நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் காப்பாற்றுவோம் என்பதை உங்கள் கர ஒலி மூலம் நீங்கள் காட்டியாக வேண்டும் (மீண்டும் கையொலி).

"இந்த உறுதி மொழிகளைத் தமிழ் கூறும் நல்லுலகத்தின் சார்பாக - தமிழக மக்களின் சார்பாகப் பிரதமருக்குத் தருகிறேன். தமிழ் வாழ்க! இந்திய பிரதமர் வாழ்க! அண்ணா நாமம் வாழ்க!

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வாறு உரையாற்றிய பின்னர், தமிழக அரசு

சார்பில் தாயாம் தமிழ்நலம் காக்கத் தளராது பாடுபட்டுவரும் ஐவருக்கு, ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபாய் விதம் பொற்கிழி வழங்கப் பெற்றது.

அதன்படி மே. வீ. வேணுகோபால் பிள்ளை, அவ்வை துரைசாமி பிள்ளை, பி. ஸ்ரீ. ஆசாரியா, பெரியசாமி தூரன், கா. அப்பாதுரையார் ஆகியோருக்குப் பிரதமர் அவர்கள் தனது கரத்தால் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கினார்.

யோகி சுத்தானந்த பாரதியார், கம்பன் அடிப்பொடி சா. கணேசன், பெ.கோ. சுந்தரராசன் ஆகியோருக்கும் - கிருபானந்தவாரியார், வன்மீக நாதன் ஆகியோருக்கும் பாராட்டுவழங்கப்பட்டது.

**பிரதமர் உரை**

இதன் பின்னர், இந்தியப் பிரதமர் அவர்கள் தமது சிறப்புரையை ஆற்றினார். அவரது ஆங்கில உரையை அரசு இரண்டாவது செயலாளர் திரு க. திரவியம் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்தார்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பேசத் தொடங்கியபோது ''தமிழர் உலக மாநாட்டுக்கு வணக்கம்'' என்று தமிழில் கூறினார். தொடர்ந்து அவர் ஆங்கிலத்தில் பேசியதாவது :

இந்த சரித்திரப் பிரசித்தி. பெற்ற அழகிய நகரில் உலகத் தமிழ் மாநாட்டில் உங்களுடன் இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். சங்கப் புலவர்களின் தேர்ந்து தெளிந்த மொழிகளையும் புலமை நயம் மிக்க காவியங்களையும் பற்றிய நினைவுகளை நம் முன் கொண்டு வருவது மதுரை நகரம்.

பல மொழிகளும் பல கலாச்சாரங்களும் ஒருங்கே அமையப் பெற்று வரும் நம் பொதுமைச் சூழ்நிலையில் முக்கிய இடம் பெற்றுள்ள இலக்கியம் கலை, கலாச்சாரம் பற்றி சிந்தித்து கூடிப் பேசி ஆலோசித்து பல நாட்டு அறிஞர்களும் ஒன்றாகக் கூடுவதற்கு ஏற்புடைய பொருததமான நகரம் இந்த மதுரை.

மனிதனின் வாழ்வில் அடிப்படை நியதிகளையும் கடமைகளையும் வலியுறுத்தும் பேரியக்கமாகவும் சிறந்த நீதி நூலாகவும் உள்ள திருக்குறள் இதை நமக்கு நினைவுறுத்துகிறது.

'திரைகடலோடி திரவியம் தேடு' என்று அவ்வைப் பிராட்டியார் கூறினார்.

தமிழர்கள் எகிப்து, கிரேக்கம், ரோமாபுரி போன்ற நாடுகளுடன் நெருங்கிய வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர்.

வாசனைத் திரவியங்கள் ஏலக்காய் கிராம்பு போன்றவற்றையும் அணிகலன்களையும் தமிழகத்திலிருந்து பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

கிரேக்க, லத்தீன் அரசர்கள் தமிழக மக்களின் உயர்ந்த பண்பாட்டினைப் பற்றி பாராட்டியுள்ளனர்.

துவக்க கட்டத்தில் கிரேக்கர்களும் பிறகு அரபு நாட்டவரும் தமிழக மக்களின் பன்னாட்டு வர்த்தகத்துக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தந்தனர்.

தமிழில் இருந்து கிரேக்கர்கள் கடன் வாங்கிய பல சொற்கள் பின்னர் ஐரோப்பிய மொழிகளில் புகுந்து உள்ளன.

ரோம் நாட்டைச் சேர்ந்த பழைய நாணயங்கள் மதுரையில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டன.

இதிலிருந்து மதுரையில் கிரேக்க-ரோம குடியிருப்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இருந்தது என்பது தெளிவாகிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடி புறநானூற்றுப் புலவர் இந்தப் புதுமைக் கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்.

தொன்மையும் வளமையும் மிக்க ஒரு மொழி தமிழ்.



இந்திய மொழிகளில் பேசப்படும் மொழிகளுக்குப் பெரிதும் மாறுபடாத நிலையில் எழுதப்பட்டு பண்டைய பேரிலக்கியத்தில் அமைக்கப்பட்டு இன்றும் பேச்சு வழக்கு உள்ளதுமான ஒரே மொழி தமிழ்தான்.

கவிதை நயம் பொருந்திய தமிழ் பல நாட்டுத் தொடர்புகளையும் பெற்றிருந்தது.

குறுகிய மனப்பான்மையை வெறுத்து ஒதுக்க எனக்குச் சிறு வயதிலிருந்தே போதிக்கப்பட்டு வந்தது.

வடக்கில் பிறந்த நான் கிழக்கிலும் மேற்கிலும் கல்வி பயின்றேன்.

வாழ்க்கையின் தொடக்கக் கட்டத்திலேயே தென்னிந்தியாவின் பல பகுதிகளில் நான் பயணம் செய்துள்ளேன்.

பொதுமை உணர்வு பெற்றவரை (நேரு) என் தந்தையாகப் பெற்றிருந்தேன்.

தமிழை நான் சிலகாலம் பயின்றபோதிலும் தமிழை எனக்குப் பேச முடியாதது எனக்குக் குறையாகத்தான் உள்ளது.



## அனைத்தும்! அண்ணாவே

இந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு சிறப்புற நடைபெறுவதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்களே முழு முதற் காரணம்! அந்தச் சக்திதான் எனக்கு ஊக்கத்தைத் தருகிறது. இதை மூட நம்பிக்கையாகக்கூட நீங்கள் நினைக்கலாம். என்னைப் பொறுத்த வரை அந்த நம்பிக்கையை நான் என் இறுதி மூச்சு வரை பின்பற்றிக் கொண்டே இருப்பேன்!

—மாண்புமிகு முதல்வர்.
(உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க விழாவில்)

இருந்தாலும் 50 ஆண்டுகளுக்கு முன் நான் தமிழ் நாட்டுக்கு முதன் முறையாக வந்த காலத்தில் இருந்து இன்றுவரை தமிழைக் கேட்டு உள்ளேன்.

அதன் வளம் - இனிமை - எழிலை நான் வியந்து பாராட்டியுள்ளேன்.

திருக்குறள், சிலப்பதிகாரம், பாரதியார் பாடல்கள் மொழி பெயர்ப்புகளைப் படித்து அவற்றின் அருமை பெருமைகளை உணர்ந்துள்ளேன்.

காமராஜர், அண்ணா, ராஜாஜி, சத்தியமூர்த்தி ஆகியோர் தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்ப்பவர்கள். சமுதாய பாகுபாடுகள் நமது வாழ்க்கையைப் பாதித்துக் கூறுசெய்து உள்ளது.

சமஸ்கிருதம், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகள் குறித்து தமிழ் அஞ்சத் தேவையில்லை.

தமிழின் உறுதியும் வளமும் ஒரு நாளும் பாதிக்கப்படாது. அதன் செழுமை ஒரு நாளும் வற்றாது.

ஒரு மொழியின் பாதிப்பில் மறுமொழிக்கு அனுகூலம் என்பது சரியல்ல.

மத்திய அரசின் மொழிக் கொள்கை எல்லா இந்திய மொழிகளுக்கும் - அரசியல் மொழிகள் மட்டும் இன்றி சிறிய மொழிகள் அனைத்தின் வளர்ச்சிக்கும் உதவுவதுதான்.

மத்திய அரசு இந்தியில் மட்டும்தான் அக்கறை கொண்டுள்ளது என்று செய்யப்படும் பிரச்சாரம் தவறானது.

மத்திய அரசைப் பொறுத்தவரை எல்லா மாநில மொழிகளுடனும் அன்பு கொண்டு உள்ளது. ஆனால் மக்களை இணைக்க இணைப்பு மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்று கருதுகிறது. ஆனால் திணிப்பை நாங்கள் விரும்பவில்லை.

ஏனென்றால் அதனால் எதிரான விளைவுகளே ஏற்படும்-இவ்வாறு உரையாற்றிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தனது பேச்சின் இறுதியில் தமிழக மக்கள் அனைவருக்கும் தனது பொங்கல் வாழ்த்துக்களைத்தெரிவித்து ''நன்றி—வணக்கம்'' என்று தமிழில் கூறி விடை பெற்றார்.

—இதனையடுத்து, உலகத் தமிழ் மாநாட்டு விழாக்குழுத் தலைவர் என்ற முறையில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் நன்றியுரையாற்றினார். அப்போது அவர் ''இந்த மாநாடு எல்லா வகையிலும் இவ்வளவு சிறப்புற அமைய, பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயத்தில் நிறைந்திருந்த - எங்கள் எல்லோரது நெஞ்சிலும் நீக்கமற நிறைந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களே முழுமுதற் காரணம்'' எனக் குறிப்பிட்டார். மாநாடு சிறக்கப் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

தேசிய கீதத்தோடு விழா நிறைவுற்றது.




கூடல் மாநகரிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்துவக்க நாள், தமிழறிஞர் இதயமெல்லாம் உவக்கும் நாளாக அமைந்திருந்தது.

மதுரை மாநகரினை நோக்கி வரும் முக்கியச் சாலைகளில், நகரின் எல்லையில் தோரணவாயில்கள் சிறப்புற அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டன. சேரன் தோரண வாயில், சோழன் தோரணவாயில், பாண்டியன் தோரணவாயில், அங்கயற்கண்ணி தோரண வாயில், நக்கீரர் தோரண வாயில் ஆகிய ஐந்துமே செந்தமிழ் விழா நாளின் துவக்கத்திலே திறந்து வைக்கப்பட்டன.

**பாண்டியன் தோரண வாயில்**

மதுரை அருப்புக்கோட்டை சாலையில், அவனியாபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த பாண்டியன் தோரணவாயிலை வணக்கத்திற்குரிய மதுரை மேயர் திரு கே.பாலகிருஷ்ணன் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும்கலந்து கொண்டு சிறப்பித்த இவ்விழாவிற்கு அகில இந்திய பார்வர்டு பிளாக் செயலாளர் திரு ஆண்டித் தேவர் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாத் தலைவர் தன்னுடைய உரையில் குறிப்பிட்டதாவது: ''தமிழ் வளர்ந்த மதுரைமாநகரில், தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களுக்கெல்லாம் பெருமை செய்திடும் விதத்தில் இந்தப் பாண்டியன் தோரண வாயில் அமைக்கப்பட்டுள்ளது. நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவருக்கு உலகத்தமிழ் மாநாட்டையொட்டிச் சிலை அமைக்கப்படுகிறது. இந்த உயரிய பணிகளுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.''

தோரண வாயிலைத் திறந்து வைத்துப் பேசுகையில் -''சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த எங்கள் சிங்கார மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடப்பதற்காக நாங்கள் பெருமை கொள்கிறோம். இதற்காக மதுரை மாநகரமே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறது. இந்த மாநாட்டின் நினைவாக, மதுரை மாநகராட்சிமூலம் விரைவிலேயே ஒரு நினைவுக் கம்பம் நிறுவப்படும்'' என்று குறிப்பிட்டார் மேயர்.

**சேரன் தோரண வாயில்**

திருநெல்வேலி - விருதுநகர் முதலிய ஊர்களிலிருந்து மதுரை மாநகருக்கு வருகை புரிகின்ற மக்கள் நுழைகின்ற திருப்பரங்குன்றம் சாலையில் சேரன் தோரண வாயில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த வாயிலை, செட்டி நாட்டரசர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களின் தலைமையில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் திறந்து வைத்தார்.

தலைமை ஏற்ற செட்டிநாட்டரசர் குறிப்பிட்டதாவது:

''முன்பு நடைபெற்ற 2வது உலகத் தமிழ் மாநாட்டின்போது நடைபெறாத புதுமை, இந்த மாநாட்டினையொட்டித் தோரணவாயில்கள் உருவாக்கப்படும் பணி. இந்த அரும்பணிக்குப் பாராட்டு வழங்க வேண்டும்.

''2வது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் சிறப்பாக நடைபெறுவதற்குக் காரணமாக இருந்த அறிஞர் அண்ணா அவர்களும் - உலகத் தமிழ்மாநாடு அமைவதற்காக அரும்பாடுபட்ட தனிநாயக அடிகளாரும் இன்று நம்மிடையே இல்லை, அவர்கள் இருவரையும் நாம் எண்ணுதல் வேண்டும்.''

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''தமிழ்மொழி வாழ்ந்தால் தான் தமிழ் மக்கள் உயர்வடைவார்கள். தமிழர்கள் உயர்ந்தால் தான் தமிழ்நாடு செழித்து ஓங்கும்; தமிழ் மொழியைத் தமிழர்கள் மட்டுமின்றி உலகத்து மக்களெல்லாம் அறிந்து கொள்வதற்குரிய சாதனம்தான் உலகத் தமிழ்மாநாடு.

''தோரணம் கட்டுவது மங்கலச் சின்னம் ஆகும். இன்று தோரண வாயில் எழுப்பப்படுவது -சங்க காலத்தை நினைவுறுத்துவது போல் அமைகிறது.

''நான் மாடக் கூடலான மதுரையில் அந்நாளில் புலவர் கூடினர்; கலந்துரையாடினர்; அதனால்தான் இந்நகரம் நான் மாடக்கூடல் என்ற பெயர் பெற்றது.

''சேரமன்னன் - முன்பு பாண்டிய நாட்டிற்குள் நுழைந்த போது இந்தப் பாதையின் வழியாகத்தான் வந்திருப்பான். பாண்டிய நாட்டு மக்கள் மற்ற நாட்டு மக்களை அன்போடு வரவேற்பதிலும் அவர்களுக்கு விருந்தளிப்பதிலும் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதற்கு அடையாளச் சின்னம் தான் இந்த சேரன் தோரண வாயில்''

மாண்புமிகு கல்வி அமைச்சரும், ஊரகத் தொழில் அமைச்சரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**சோழன் தோரண வாயில்**

இராமநாதபுரம் சாலையில் அமைக்கப்பட்டிருந்த சோழன் தோரண வாயில் தான் அத்தனை தோரண வாயில்களையும் விடப் பெரியதாகும்.

**பி.எல்.ஆர்**

# வனப்பு மிகு வரவேற்பு வாயில்கள்




























1. பாண்டியன் தோரணவாயில்
2. சோழன் தோரண வாயில்
3. சேரன் தோரண வாயில்
4. அங்கயற்கண்ணி தோரணவாயில்
5. நக்கீரர் தோரண வாயில்
6. கண்காட்சி முகப்பில் அமைக்கப் பட்டுள்ள மூவேந்தர் நுழைவு வாயில்

இதன் அகலம் 50 அடி. உயரம் 51 அடி. கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இதன் மேல் வளைவு இராமநாதபுரம் அரண்மனை முன் தோற்ற அமைப்போடு உருவாக்கப்பட்டிருக்கிறது.

திரு வை. கணபதி ஸ்தபதி அவர்கள் மேற்பார்வையில், திரு சு. நாகராஜ ஸ்தபதியால் கட்டப்பட்ட சோழன் தோரண வாயிலை முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில், தொழிலதிபர் திரு நா. மகாலிங்கம் அவர்கள் திறந்து வைத்தார்.

பெரியவர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் தன்னுடைய தலைமை உரையில் ''சேர சோழ பாண்டிய மன்னர்களுக்குள் இருந்த ஒற்றுமை உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில்தான், இந்தப் பாண்டிய நாட்டு நுழைவில் 'சோழன் தோரண வாயில்' நிர்மாணிக்கப் பட்டுள்ளது போலும். இவ் விழாவிற்குத் தலைமை தாங்குவதில் நான் பெருமையடைகிறேன்'' என்றார்.

திரு நா. மகாலிங்கம் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டதாவது: ''உலகில் உள்ள எல்லா தமிழறிஞர்களும் இன்று மதுரையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டைவெற்றிகரமாக நடத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மதுரை மாநகருக்குப் பழம் பெருமை மீண்டும் வரப் போவது உறுதி! உலகத் தமிழ் மாநாட்டின் ஓர் அங்கமாக இந்த சோழன் தோரண வாயிலைத் திறந்து வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன்!''

**நக்கீரர் தோரண வாயில்**

மேலூர் சாலையில் அமைந்துள்ள நக்கீரர் தோரணவாயிலை திரு டி.வி.எம். பெரியசாமி அவர்கள் தலைமையில் திருமதி சத்தியவாணிமுத்து எம்.பி. அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்விழாவில், மாண்புமிகு அமைச்சர் திரு கே.ஏ. கே அவர்களும் பங்கேற்றார்.

''நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று சிவபெருமானிடமே எதிர்த்து வாதிட்ட பெரும்புலவர் நக்கீரர் பெயரால் அமைந்துள்ள இந்தத் தோரண வாயிலைத் திறந்து வைப்பதில் உள்ளபடியே நான் பெருமை கொள்கிறேன்'' என்று



தமது உரையில் குறிப்பிட்ட திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் உலகத் தமிழ் மாநாடு காணும் தமிழரசுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறினார்.

**அங்கயற்கண்ணி தோரணவாயில்**

மதுரை அச்சம்பத்தருகில் அமைக்கப்பட்டுள்ள அங்கயற்கண்ணி தோரண வாயிலை திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தலைமையில் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவில் ஊரகத் தொழிலமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் அவர்களும் போடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சுப்பிரமணியம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பார்வையிழந்த அமெரிக்கத் தமிழறிஞர் !

**தமிழ் மொழியை அமெரிக்காவில் கற்றுக் கொண்டவர் திரு. ரோட்னிமோக் என்ற அமெரிக்கத் தமிழறிஞர். இவர் தமிழ் மட்டுமல்லாமல் மலையாளம், இந்தி, ரஷ்யம் ஆகிய மொழிகளிலும் ஆராய்ச்சிக்கட்டுரைகளை எழுதியிருக்கிறார். மதுரை மாநாட்டில் கலந்து கொண்ட திரு. மோக், ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றைப் படித்தார். இவர் பார்வை இழந்தவர்.**

விழா தலைமையேற்றுப் பேசுகையில் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"இவ்விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பினைத் தந்த அரசுக்கும் அதன் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் காலத்தில் அடுத்த ஊரிலிருந்து அடுத்த மாநிலத்திலிருந்து வருகிற மன்னர் பெருமக்களை வரவேற்பதற்காக அமைக்கப்பட்டவை தோரண வாயில்களாகும். இன்று மன்னர்களில்லையே இவையெல்லாம் எதற்கு என்று ஒருசிலர் கேட்கலாம். இன்று எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். எனவேதான், அடுத்த ஊரிலிருந்து வரும் இந்த மன்னர்களை வரவேற்பதற்கு இவை கட்டப்பட்டுள்ளன. அழகான தமிழ்ப் பெயரில் அங்கயற்கண்ணி நுழைவாயில் என்று வைத்துள்ளனர்.

"சிதம்பரத்தில் நின்று அருள் பாலிக்கும் நடராசர் போல், திருவரங்கத்தில் படுத்து அருள்பாலிக்கும் ரெங்கநாதர் போல், திருவாரூரில் இருந்து அருள்செய்யும் தியாகேசன் போல், மீனாட்சியம்மை அருள்பாலிக்கும் இந்த மதுரையில் சேர சோழ பாண்டியன் பெயர்களில்தோரண வாயில்கள், ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் இப்படி ஐந்து தோரண வாயில்கள் இன்று திறக்கப்படுகின்றன''

அங்கயற்கண்ணி தோரண வாயிலை திருமுருக கிருபானந்த வாரியார் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்ததாவது:

''அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். எனக்கு வேலைகள் அதிகமிருந்தபோதிலும் எத்தனையோ நல்ல காரியத்தைச் செய்யும் இந்த அரசுக்கு நாமும் சிறுஉதவி செய்வோம் என்று எண்ணி கலந்துகொள்ள விரைந்து வந்தேன். சோழன் இந்திர விழா எடுத்தது போல் 7 நாட்கள் விழா நடக்கின்றது. இவ்விழா 'தேவைதானா' என்று சிலர் கேட்கலாம். இதோ இந்தத்தோரணம் கட்டிய தொழிலாளியின் வயிறு நிறைகிறது. இந்த தோரண வாயில் ஆயிரமாயிரம் ஆண்டுகள் நின்று அம்பாளின் கருணையைப் பொழியுமாறு வேண்டுகிறேன்"

# ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு துவக்க விழா

புத்தாண்டான 1981 பிறந்தவுடனேயே பாடல் பெற்ற பழம் பதியாம் மதுரையில் மக்கள் கடல் உற்சாகத்துடன் அணி திரளத் தொடங்கியது. 5ஆம் உலகத் தமிழ் மாநாட்டைக் காண பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் மக்கள் மதுரை மாநகரத்தை முற்றுகையிடத் தொடங்கினர். தமிழ்த் தேனை உண்ணத் துடிக்கும் தமிழ்த் தும்பிகளாக மாறிவந்தனர் மக்கள்.

சனவரி 4-ஆம் நாள்!

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க நாள்; அன்று மாலை பந்தயத் திடலில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் மேதகு ஆளுநர் அவர்கள்மாநாட்டைத்தொடங்கி வைத்தார்கள்.

பந்தயத் திடலில் உள்ள வள்ளுவர் கலை அரங்கத்தில் தொடக்கவிழா நடைபெற்றது. திடலைச் சுற்றி எங்கு பார்த்தாலும் மக்கள். எழுச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்டார்கள். மதுரையில் ஆண்டு தோறும் நடைபெறும் சித்திரைத் திருவிழாவின்போது காணப்படும் மக்களைப் போல பத்து மடங்கு மக்கள் தமிழ் விருந்தை உண்பதற்காகத் திரண்டிருந்தார்கள், பந்தயத் திடலில். மாலை 5 மணி அளவில் நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன் அவர்களின் நாயன இசை நிகழ்ச்சி நடைபெற்றது; பின்னர் 6.30 மணி அளவில் மாநாடு துவக்கம் ஆகியது.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள், மாநாட்டுக்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''நடைபெறும் 5-வது உலகத் தமிழ் மாநாடு இதுவரை நடைபெற்றுள்ள 4 மாநாடுகளைவிட சிறந்ததாக - உயர்ந்ததாக- தமிழ் மொழியின் வளமும் பெருமையும் எல்லா வகையிலும் வளர்ச்சியுற்றுச் செழிக்கும் வகையிலே விளங்கும் என்பதைஎடுத்துக்காட்டும் முறையில் விளங்குகிறது என்னும் செய்தி நமக்கெல்லாம் பெருமையை அளிக்கிறது.

''பல்வேறு நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளுக்குப் பெரிய சிறப்பு இருந்தாலும் கூடல் மாநகரில் நடைபெறும் விழா தமிழின் வரலாற்றை மீண்டும் உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளது என்பதை எடுத்துச் சொல்வதை என் கடமையாகக் கருதுகிறேன்.

''மதுரை தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரம் என்பது மாத்திரமல்ல-இந்தியத் துணைக் கண்டத்தின் 60 கோடி மக்களின் பார்வையில் - மனங்களில் பதிந்திருக்கும் நகரம் என்பது மாத்திரமல்ல-உலகிலேயே முதிய நகரமாகவும் இருந்திருக்கிறது என்ற அளவுக்குத் தொன்மை மிக்கதாக - பெருமை மிக்கதாக இது விளங்குகிறது. நான் மதுரையைப் பெருமைப்படுத்திப் பேசுவதாக யாரும் கருத வேண்டாம். தக்க சான்றுகளை வைத்துத்தான் பேசுகிறேன்.

''இங்கே திறக்கப்படும் கண்காட்சியில் தொல் பொருளியல் பகுதியில் உள்ள மனிதனின் எலும்புக் கூடு இந்த உண்மையை உணர்த்தும். அது தோண்டி எடுக்கப்பட்ட இடம் மதுரை கோவலன் பொட்டல் ஆகும். சிலப்பதிகாரப் பெண் ஒருத்தி தனது மணாளனை இழந்து, மன்னனுடன் வாதாடினாள் என்று சொல்லப்படுவது வரலாறா? கதையா? இலக்கியமா என்றெல்லாம் கேள்விகள் கேட்கப்பட்டன. கோவலன் திடலில் கிடைத்த இந்த எலும்புக் கூடு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என ஆய்வாளர்கள் கூறியிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு





முன்பே மதுரை மாநகரம் இருந்திருக்கிறது-என்ற பெருமை வரலாறு மதுரைக்கு உண்டு-என்பதை இந்த மாநாடு அறிவுறுத்துகிறது.

''தொன்மை வாய்ந்த-தமிழ் வளர்ந்த -மதுரை, தமிழர்களின் நாகரிகம் பண்பாடு - இலக்கியம்-கலாச்சாரம் - வாழ்வியல் ஆகியவை மேலும் மெருகூட்டப்படும் விதத்தில் - உலகத்தின் தலையாய சமுதாயம் வாழ்ந்த இடமாக - தலைநகரமாகத் திகழ்ந்த மூதூர், கூடல் என வழங்கப்பட்டது மதுரை நகரம் ஆகும் என்பதை உலகத்துக்கு அறிவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் நடத்த வேண்டும் எனத் திட்டமிட்டார்கள்.

''1968ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களால் உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட்டது. இப்போது 1980-ல் 12 ஆண்டுகள் கழித்து மதுரையில் சிறப்பாக நடத்தப்படுகிறது. உலகச் சுழற்சியில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறுதல் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. புராணக் கருத்துக் கொண்டவர்களும் இதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். அறிவியல் கருத்துள்ளவர்களும் இதை ஒத்துக் கொள்ளுகிறார்கள். இயற்கை விதித்த கட்டளையின்படி 12 ஆண்டுகளுக்குப் பின்னர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மேதகு ஆளுநர் சாதிக் அலி அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைக்க-இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் விழாவை நிறைவு பெறச் செய்ய இருக்கிறார்கள். இவை வரலாற்றில் இடம்பெறும் நிகழ்ச்சிகளாகும்.

''உலகத்தின் பல நாடுகளைச் சார்ந்த 600 பேராளர்கள்-வந்திருந்து தமிழின் வளர்ச்சியை - 'என்றும் இளமை மாறாதிருக்கும் தமிழ்' என்று சுந்தரம்பிள்ளை சொன்னாரே அந்தத் தமிழை-'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாரதியார் சொன்னாரே அந்தத் தமிழை-'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வழங்கப்பட்ட அந்தத் தமிழை-ஆய்வு செய்ய மேலும் வலிவு அடையச் செய்ய-அறிவோடுஇணைந்துவிஞ்ஞானத்தோடு இணைந்து - ஆராய்ச்சியோடு இணைந்து-மதுரைப் பல்கலைக் கழக வளாகத்தில் விவாதம் செய்ய இருக்கிறார்கள். அகமும் புறமும் கலந்த விழாவாக இந்த உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிறது. பந்தயத் திடலில் புறவிழாவும்-பல்கலைக் கழகத்தில் அகவிழாவும் நடைபெறுகின்றன. இந்த விழாவுக்கு-மாநாட்டுக்கு வந்துள்ள அனைவரையும் - தமிழ் மக்களின் சார்பில் தமிழ்நாட்டின் சார்பில்-தமிழக முதல்வர் அவர்களின் சார்பில் வருக வருக என வரவேற்கிறேன்!

''உலகத் தமிழ் மாநாடு அமைவதற்குக் காரணமாக இருந்த தனிநாயக அடிகளை நினைவுகூர்ந்து - அவருக்கு வணக்கம் செலுத்தி அனைவரையும் வருக வருக என வரவேற்கிறேன்''

உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு நீதிபதி எஸ். மகராசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் அரசியல் சார்பற்ற மன்றம். தமிழகத்தில் ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் அனைவரும் எங்களுக்கு ஆதரவு தந்து வருகிறார்கள். தமிழைப் பற்றி-தமிழரைப்பற்றி மேல்நாட்டாருக்கும் வெளிநாட்டாருக்கும் எடுத்துக் கூறவேண்டும் என்ற ஒரே எண்ணத்தின் காரணமாக இந்தத் தமிழ் மன்றம் துவக்கப்பட்டது.

“தமிழைப் படிக்கும் நமது கண்களுக்கும் தெரியாத உண்மை, பல மேல் நாட்டாருக்குத் தெரிகிறது. மனத்தில் எந்தக் கேள்விகள் எழுந்தாலும் அந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லும் வல்லமை தமிழுக்கு இருக்கிறது என்று டேனியல் லூ என்ற ஓர் அறிஞர் சொல்லியுள்ளார். மற்றும் மேனாட்டு அறிஞர் ஒருவர் கிரேக்க மொழியைவிடத் துல்லியமானது தமிழ்-லத்தீன் கவிதை வளத்தைவிடச் சிறந்த வளம் பெற்றுள்ளது தமிழ்க் கவிதை என்று குறிப்பிட்டுள்ளார். மேல்நாட்டார் எல்லாம் தமிழ்படித்து தமிழின் பெருமையைச் சொல்ல

வேண்டும் என்பதற்காகவே இந்த மன்றம் நிறுவப்பட்டது.

"தனிநாயக அடிகளும் ஏ. சுப்பையா அவர்களும் இந்த மாநாட்டின் சிறப்புக்கு அடிகோலியவர்கள் ஆவர்."

நன்றியுரை கூறிய கல்வி அமைச்சர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்:

"ஆடுவோமே பள்ளுப பாடு
வோமே-தமிழ்
ஆட்சியின் மாட்சியில் கூடு
வோமே" என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார்.

ஆயுந்தோறும், ஆயுந்தோறும் இனிமை தரும் தமிழுக்கு மாநாடு எடுக்கப்படுகிறது. அதைக் காண 'வெள்ளம் போலத் தமிழர் கூட்டம்', வீறு கொள்கூட்டம் திரண்டு வந்திருக்கிறது.

"தமிழ் பாயும் நாள் எந்நாளோ என்று பாவேந்தர் கேட்டார். அந்நாள் இந்நாள் என்று கூறும் அளவுக்குக் கூட்டத்தையும் ஆர்வத்தையும் இன்று மதுரையிலே காண்கிறோம்.

'விழவு மலிமூதூர்' என்று புலவர்கள் மதுரையைக் குறிப்பிட்டார்கள்.

"தமிழில் உள்ள சிறப்பையும் தமிழ் மாண்பின் அருமை பெருமைகளையும் எடுத்துரைக்கும் வகையில் இங்கு மாநாடு நடத்தப்படுகிறது.

"தமிழின் அருமை பெருமைகள் எப்படி இருந்தன; இனி எப்படிப் பெற வேண்டும் எனத் திட்டமிட வேண்டும். அரிமா நோக்கு வேண்டும், முன்னர் வந்த வழியைத் திரும்பிப் பார்க்க வேண்டும்-இனிச் செல்லப் போகும் வழியை நிமிர்ந்து பார்க்கவேண்டும்.

"உலகத் தமிழ்ச் சங்கம் என்னும் நிறுவனம் உலகத்தில்உள்ள தமிழ்மக்களுடன் தொடர்பு மேற்கொள்ளப்பட - தமிழ் மக்கள் முழு ஆதரவு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு உறுதுணை புரியும் வகையில் நாம் எல்லாரும் பாடுபடுவோம்.

'தமிழ் என்று தோள் தட்டி
ஆடு - நல்ல

தமிழ் வெல்க வெல்க என்றே தினம் நீ டாடு' என்று பாவேந்தர் கூறினார். அந்தத் தமிழ்உணர்ச்சி தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுமாக!




மதுரைக்குத் தனிப் பெருமை உண்டு. பல்லாண்டுக் காலமாக அது நகரமாக இருந்து வரும் பெருமைதான் அது.

சோழரின் தலை நகராக இருந்த உறையூர் இன்று கிராமமாக இருக்கிறது. துறைமுக நகரமாக இருந்த கொற்கை இன்று கிராமமாக இருக்கிறது. அதிவீரராமன் பட்டினம் என்னும் நகரம் இன்று அதிராம்பட்டினம் என்ற பெயரில் கிராமமாக இருக்கிறது. 300 ஆண்டுகளுக்கு முன்னர் குப்பமாக இருந்த சென்னை இன்று மாநகரமாகக் காட்சி தருகிறது. ஆனால் மதுரை நகரம்தான் தொடர்ந்து 2,000 ஆண்டுகளாக, நகரமாகவே இருந்து வருகிறது.

—மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர்

(சேரன் தோரணவாயில் திறப்பு விழாவில்)

அடுத்த இதழில்...

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு குறித்த பிற செய்திகள்- கட்டுரைகள்- படங்கள் 'தமிழரசு' அடுத்த இதழில் (1.2.81) இடம் பெறும்!





# பிரதமர் கண்டு மகிழ்ந்த ஊர்வலம்!

— அ. மருதம்

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற ஒருவார காலத்திற்கும் மகுடம் போல் விளங்கியது நிறைவு நாள். அன்றைய தினம் மாலை 2.30 மணியளவில் நடைபெற்ற இணையற்ற ஊர்வலத்தை இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் கண்டு களித்தார். வடக்கு மாசி வீதியும் மேலமாசி வீதியும் இணையும் திருப்பத்தில் அவர் பார்ப்பதற்கென அலங்காரமேடை அமைக்கப்பட்டிருந்தது.

அம்மேடையில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களோடு - மேதகு தமிழக ஆளுநர் சாதிக் அலி, மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் ஆர். வெங்கட்ராமன், ஆர். வி. சாமிநாதன் முதலானோர் அமர்ந்திருந்தார்கள்.

ஆறு மணியளவில் பெரியார் சிலை அருகே சென்று முடிவுற்ற இந்த ஊர்வலப் பாதையின் நீளம் 7 கிலோ மீட்டராகும். தெற்குமாசி வீதி, மேலமாசிவீதி, வடக்கு மாசி வீதி, வடக்குவெளி வீதி, அண்ணா சிலை, வைகைப் பாலம், அழகர் கோயில் சாலை என்று போய் பெரியார் சிலைக்கருகே முடிவுற்ற அந்த ஊர்வலம் 16 திரைப்படக் காமிராக்களால் படமாக்கப்பட்டது. ஹெலிகாப்டரிலிருந்தும் படம் பிடித்தார்கள்.

## ஊர்வலச் சிறப்பு

ஊர்வலத்தின் முகப்பில் ஒரு குழுவினர் எக்காளம் முழக்கி வந்தனர். அதைத் தொடர்ந்து வந்த பட்டத்து யானைகள் ஐந்தும் பிரதமருக்கும் மற்றவர்களுக்கும் வணக்கம் தெரிவித்துக்கொண்டன. கோயில் குடைகள், வண்ணப் பதாகைகள் ஏந்தி வீர நடைபோட்டது ஒரு குழு.

அலங்கார வண்டியொன்றில் நாதசுரக் குழுவினர் இசைமழை பொழிந்து வந்தார்கள். உழவர் பெருமக்கள் போர். அடிக்க, பின்னே திருவள்ளுவர் நிற்க 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றோர் அலங்கார வண்டி; போரை நிறுத்திய பைந்தமிழ் ஔவை, தமிழன்னை, சிலம்பின் வென்ற சேயிழை, அருந்தமிழ் வளர்த்த அயல்நாட்டு அறிஞர்கள், அருந்தமிழ் வளர்த்த அருட்பேராளர்கள், பிட்டுக்கு மண் சுமந்த பெருமான், புவியரசர் போற்றும் கவியரசர் கம்பர், இலக்கியத் தமிழ் வளர்த்த ஈடில்லாப் புலவர்கள், வெள்ளி யாளி, திரைகடல் வாணிகத்திருக்காட்சி, மஞ்சு விரட்டு ஒரு வீர விளையாட்டு, தேரிழுத்தல், இசைத் தமிழ் பேணிய இன்னிசை மூவர், நாடகத் தமிழ்வளர்த்த நல்லோர்கள், மெய்வேல் பறியா நகும், எண்ணத்தோடு எழுத்தையும் திருத்திய எங்கள் தலைவர் பெரியார், குறிஞ்சிக் காட்சி, துறைதோறும் தமிழ்வளர்த்த அண்ணா.



குறிசொல்லல், புதுநெறி காட்டிய புரட்சிக் கவிஞர்கள், பொய்க் கால்குதிரை, காவடி -கரக ஆட்டம், கோலாட்டம், ஆண்டாள், அயல் நாட்டார் வாணிகம்-ஆகியவற்றோடு அழகுமிகு அலங்கார வண்டிகள் பல ஊர்வலத்திலே பங்கேற்றன.

## கல்விக் குழு

அலங்கார வண்டிகளின் இடையிடையே சீருடை அணிந்த பள்ளி-கல்லூரி மாணவ-மாணவியர், ஆசிரியைகளின் அணிவகுப்பு, அவர்கள் கரங்களில் உலகத் தமிழ் மாநாடுசின்னம் பொறித்த பல வண்ணப் பட்டுக் கொடிகள், தேசிய மாண-மாணவியர் படையின் அணிவகுப்பு, சாரணர் படை அணிவகுப்பு, தாரை தப்பட்டை, கத்தி, கம்பு-சுருள்கத்தி தீப்பந்த வீர விளையாட்டுகள், கொம்பு ஊதுவோர், நாட்டியக் குதிரைகள் ஆகிய குழுக்கள் பார்வையாளர்களின் இதயத்தைக் கவர்ந்தபடி சென்று கொண்டிருந்தன.

உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க நாளன்று திரண்டிருந்த மக்கட்தொகை பத்து லட்சத்திற்கும் மேல் என்றால், இந்த நிறைவுநாள் ஊர்வலம் காணவும் நிறைவு விழா நிகழ்ச்சியிலே பங்கேற்கவும் மதுரைமாநகருக்கு வருகைதந்த மக்கள் தொகை ஏறத்தாழ 25 லட்சமிருக்கும்!

# தமிழ் திருக்குறள் உலகம்

தமிழால் குறளும், குறளால் தமிழும் உலகில் இன்று பெரும் புகழுக்கும் பெருமைக்கும் ஆளாகியுள்ளன.

தமிழ், முத்தமிழாக இயல், இசை, நாடகமாகப் பிரிக்கப்பட்டுப் போற்றப்படுகிறது.

திருக்குறள், முப்பாலாக அறம், பொருள், இன்பம் என்று பகுக்கப்பட்டுள்ளது.

தமிழ் 'அ' என்ற உயிரெழுத்தில் தொடங்கி 'ன்' என்ற மெய்யெழுத்தில் முடிகிறது. திருக்குறள் 'அ'கர' என்ற உயிரெழுத்தில் தொடங்கி 1330-வது குறளில் 'பெறின்' என்ற மெய்யெழுத்தில் முடிகிறது.

இப்படி தமிழும் குறளும் ஒன்றோடு ஒன்றாக இணைந்துள்ளன. இன்று உலகம் முழுமைக்கும் தமிழின் புகழின் எடுத்துக்காட்டும் நூலாகத் திருக்குறள் விளங்குகிறது.

திருக்குறள் பற்றி உலகமொழிகள் அனைத்திலும் 900க்கு மேற்பட்ட நூல்கள் வெளியாகியுள்ளன.

திருக்குறள் ஆங்கில மொழியில் மட்டும் 35 மொழிபெயர்ப்புகள் வெளியாகியுள்ளன. ஆங்கில நாட்டு அறிஞர்கள் 12 பேர் மொழிபெயர்த்துள்ளனர். இந்திய நாட்டு அறிஞர்களில் 23 பேர் மொழிபெயர்த்துள்ளனர்.

இந்திய மொழிகளில் மட்டும் 36 மொழி பெயர்ப்புகள் வெளியாகியுள்ளன.

இந்தி மொழியில் திருக்குறளுக்கு ஆறு மொழிபெயர்ப்புகள் வெளியாகியுள்ளன.

திருக்குறள் முதல் முதலாக மொழிபெயர்க்கப்பட்ட அயல் நாட்டு மொழி லத்தீன் ஆகும். லத்தீன் மொழி பெயர்ப்பு திருக்குறள், இரண்டு பாகங்களாக 1730ல் இலண்டனில் வெளியாகியது.

மொழிபெயர்த்தவர் வீரமாமுனிவர்.

ஆனால், தமிழில் பதிப்பிக்கப்பட்ட முதல் திருக்குறள் புத்தகம் நூல் வடிவில் 1811-ல்தான் அச்சடிக்கப்பட்டுள்ளது.

திருக்குறளுக்கு வெளியாகியுள்ள மொழிபெயர்ப்புகள் மொத்தம் 150 ஆகும்.

திருக்குறள் குறித்து உலக மொழிகளில் வெளியாகியுள்ள ஆய்வுக் கட்டுரைகள் மட்டும் 2000-க்கும் மேல் உள்ளன.

திருக்குறள் கீழ்க்கண்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது:

**இந்திய மொழிகள் :**

1. வங்காளம்
2. குஜராத்தி
3. மராத்தி
4. இந்தி
5. கன்னடம்
6. மலையாளம்
7. தெலுங்கு
8. சமஸ்கிருதம்
9. உருது
10. சௌராஷ்டிரா

**பிற அயல்நாட்டு மொழிகள் :**

1. பர்மிய மொழி
2. சீன மொழி
3. மலாய்மொழி
4. சிங்களம்
5. பிஜி
6. செக்
7. டச்சு
8. ஆங்கிலம்
9. பின்னிஷ்
10. பிரெஞ்ச்
11. ஜெர்மன்
12. லத்தீன்
13. போலிஷ்
14. ருஷ்யன்
15. ஸ்விடிஷ்

—மாமூலன்

# செந்தமிழ் வளர்ந்திட.... சிந்தைக்கு விருந்தூட்ட....

நூலகத்திற்குள் நுழைகிறோம். அங்கே பலதுறை சம்பந்தப்பட்ட நூல்கள், வெளியீடுகள், குறிப்பேடுகள் முதலியன புதைந்து கிடக்கின்றன. அவற்றுள் தமிழ்க் கலைக் களஞ்சியமும் ஒன்று. இதை நாம் படித்திருக்கிறோம். அந்தத் தமிழ்க் கடலிலே மூழ்கி அழகிய வெண் முத்துக்களை எடுத்திருக்கிறோம். அந்த முத்துக்களைத்தாம் அணியாரமாகத் தமிழன்னைக்குச் சூட்டியிருக்கிறோம்.

'தமிழ்க் கலைக் களஞ்சியம்' தயாரிப்பது என்பது எளிதான செயலல்ல. அது பல்லாண்டுக் காலம் நுணுகி நுணுகி, ஆய்ந்து ஆய்ந்து உருவாக்குகின்ற அரிய பெரிய பணியாகும்....

அந்த மாபெரும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, கலைக்களஞ்சியத் தொகுதிகளை உருவாக்கித் தந்த நிறுவனம் தான் தமிழ் வளர்ச்சிக் கழகம்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் தமிழ் வளர்ச்சிக்கழகம் ஏற்பட்டது. இந்தியா விடுதலை பெற்ற நன்னாளில், இனிய தமிழில் கலைக் களஞ்சியம் படைக்கின்ற மாபெரும் பணி பற்றிய எண்ணம் அன்று மலர்ந்

தது. ஆனால், இப்பணிக்கு மிகுந்த பொருள் செலவாகு மன்றோ?

''நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க, தமிழன்பர்கள் பலர் மனமுவந்து நிதியினைக் குவித்தார்கள். மத்திய, மாநில அரசுகளும் நிதி தர முன்வந்தன.

தமிழக அரசின் சார்பிலே இயங்கிவந்த இம்மன்றம், 1947 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், கலைக்களஞ்சியப் பணியைச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தில் தொடங்கியது. அன்றுமுதல் இன்று வரை பத்துத்தொகுதிகள் வெளி வந்துள்ளன. ஒவ்வொன்றும் சுமார் 700 பக்கங்களுக்கு மேல் உள்ளன. முதல் தொகுதி 1954ஆம் ஆண்டில் வெளிவந்தது.

தமிழ்க்கலைக் களஞ்சியம் முதல் தொகுதி உருவாக ஆறாண்டுகள் பிடித்திருக்கின்றன. இதே போல ஆங்கிலத்தில் 'சேம்பர்ஸ் என்சைக்ளோப்பீடியா, வெளியிட 10 ஆண்டுகளும், 'என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' வின் 9 ஆம் பதிப்பைத் திருத்தி அமைக்க 15 ஆண்டுகளும், ஜப்பான் மொழியில் 10 தொகுதிகள் கொண்ட கலைக் களஞ்சியம் வெளியிட 12 ஆண்டுகளும், இத்தாலிய மொழியில் கலைக் களஞ்சியம் வெளியிட 9 ஆண்டுகளும் ஆகியிருக்கின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

தமிழ்க் கலைக் களஞ்சியம், எல்லாரும் போற்றுகின்ற வகையில் அமைந்திட ஆயிரக் கணக்கான பேர்கள் உதவியிருக்கிறார்கள். சுமார் இரண்டாயிரம் பேர் கட்டுரைகள் எழுதியும், படங்கள் வரைந்துமுள்ளனர். இந்த அரிய பணி முடிவடைய 21 ஆண்டுகள் ஆகின. இதன் பத்தாம் தொகுதி 1968ல் வெளியானது. இது இணைப்புத் தொகுதியாக வெளிவந்துள்ளது. இதில் பொருட் குறிப்பு அகராதியும் இடம் பெற்றுள்ளது.

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!'' என்ற பாரதியின் கனவை நனவாக்குகின்ற வகையிலே கலைக் கருவூலமாக, தமிழனின் அரிய சொத்தாக விளங்குகிறது, தமிழ்க் கலைக் களஞ்சியம்.

நாளைய தலைமுறைகளான இன்றைய அரும்புகள் மணம் வீசும் மலர்களாகத் திகழ்ந்திட, அவர்களுக்கென்றே 'குழந்தைகள் கலைக் களஞ்சியம்' தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டு இதுவரை-10 தொகுதிகளைத் தயாரித்து வெளியிட்டிருக்கின்றது.

குழந்தைகள் மனத்தில் நன்கு பதிகின்ற வகையிலே, வண்ண வண்ணச் சித்திரங்களோடு காட்சியளிக்கும் கவின்மிகு தொகுப்பான இது, குழந்தைகளை மட்டுமல்ல பெரியவர்களையும் கவரக் கூடியதாகும்.

சிந்தைக்கு விருந்தூட்டும் இக் கலைக் களஞ்சியங்கள், செந்தமிழ் வளர, நாம் செம்மாந்து நிற்கத் துணை புரிகின்றது என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

**பி. வி. கிரி**

## பார்த்தோம்! படித்தோம்!

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பிதழ் தித்திக்கும் தேனாய் இனித்தது.

—ஜி. திருமலை,
ஊத்துக்கோட்டை.

உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பிதழ், தமிழ் மொழியின் அருமையை - பெருமையை உணர்த்திடும் உன்னத மலராகத் திகழ்ந்தது.

—மா. தினகரன்,
சென்னை-11.

முதல்வரின் உரை -இலவச இணைப்பு முத்தாய், மணியாய் ஒளிர்ந்தது.

—அ. சேக்மைதீன்,
வத்தலக்குண்டு.

ஒவ்வொரு இதழிலும் ஒரு சிறுகதை இடம்பெற வேண்டும்.

—பு. இளங்கோ,
திருவையாறு.

'தேசிய வளர்ச்சி மன்றத்தில் தமிழக முதல்வரின் வீரஞ்செறிந்த உரை, கருத்துக்களின் பெட்டகம்!

—செந்தமிழ்ச்செல்வன்,
ஆரணி.

இணையற்ற செய்திகளை வெளியிடும் தமிழரசைப் போற்றுகிறேன், வாழ்த்துகிறேன்.

—ரெ. சண்முகம்பிள்ளை,
(ஓய்வு பெற்ற மாவட்டப் பதிவாளர்) தஞ்சாவூர்-1.

'தமிழரசு' இதழில் வெளிவரும் கட்டுரைகள் உள்ளத்தைத் தொடுகின்றன.

—மா. பொன்னுசாமி,
காரைக்கால்.

'அறிவியல் அரங்கம்' மீண்டும் இடம்பெற வேண்டும்.

—ஆர். கண்ணன்,
கீழக்கண்டனி,
சிவகங்கை.

பரிசுச் சீட்டுக் குலுக்கல் முடிவுகள், தமிழரசிலும் வெளிவர வேண்டும்.

—என். பாலு,
திருச்சி.

மருத்துவச் சம்பந்தமான கட்டுரைகள் ஒவ்வொரு இதழிலும் இடம்பெற வேண்டும்.

—டி. எஸ். ஏகாம்பரம்,
திருத்தணி.

'அரசின் அறிவிப்புகள், பகுதி பயனுள்ளதாக இருக்கிறது.

—புவி,
இராமநாதபுரம்.

'தமிழரசு' புதுமைப்பொலிவோடு வெளிவருகிறது. அருமையான கவிதைகள் - அழகான ஓவியங்கள் - மனத்தைக் கவர்கின்றன.

—வ. தேனப்பன்,
தேவகோட்டை.

பி.வி. கிரியின் 'மறுபிறவி' படிப்பினையூட்டும் சிறுகதையாக அமைந்திருந்தது.

—ஆர். அமுதா,
வடுகவிருட்சியூர்.

# அரசின் அறிவிப்புகள் — ஆக்கப் பணிகள்

**1—12—80**

அரசின் மருத்துவத் துறையில் பணி யாற்ற தேர்ந்தெடுக்கப்படும் டாக்டர் கள் எண்ணிக்கை இந்த ஆண்டு முதல் 700 இல் இருந்து 1,400ஆக அதிகரிக்கப் படும் என்று மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் கூறினார்.

**2—12—80**

திருப்பரங்குன்றம் மலை மீது ஆறுபடை வீடு அமைக்கும் பணி விரைவில் தொடங் கும் என்றும் அதற்காக ரூ. 10 இலட்சம் செலவிடப்படும் என்றும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் தெரிவித்தார்.

**3—12—80**

தமிழ்நாட்டில் 5 கோடி பனைமரங்கள் உள்ளன. திருச்செந்தூர், முதுகுளத்தூர், பரமக்குடி ஆகிய மூன்று இடங்களில் பனைமரத்தை பயன்படுத்துவது பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு பொதுப்பணி மற்றும் கைத் தறித்துறை அமைச்சர் திரு எஸ். என். இராசேந்திரன் அவர்கள் கூறினார்.

**4—12—80**

கடைகளில் வேலை செய்யும் ஊழியர் களுக்குக் குறைந்தபட்சம் ஊதியம் நிர் ணயிப்பதால் 3 இலட்சம் ஊழியர்கள் பலன் பெறுவார்கள் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் கூறினார்.

**5—12—80**

விவசாயிகளின் கடன் மற்றுமுள்ள பிரச் சனைகள் பற்றி பரிசீலிக்க உச்சமட்டக் குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்.

**8—12—80**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலை வர் அலுவலகத்திற்காக புதிதாகக் கட் டப்பட்ட அலுவலகக் கட்டடத்தை நாகர்கோவிலில் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் திறந்து வைத் தார்.

**9—12—80**

கிராம மக்களுக்கு போக்குவரத்து வசதி களை அதிகரிக்க, மாவட்டந்தோறும் தனித்தனியான போக்குவரத்துக் கழகங் களை அமைக்க அரசு ஆலோசித்து வரு வதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ. முத்துச்சாமி அவர்கள் கூறினார்.

**12—12—80**

மேல்நிலைப் பள்ளிகளில் புதிய கல்வித் திட்டம் சரிவர செயல்படுத்தப்படுகிறதா அங்குள்ள குறைகள் என்ன என்பதை தமிழக அரசு நேரடியாகக் கண்காணித்து வருகிறது.

**13—12—80**

மாட்டு வண்டித் தொழிலாளர் குறை களை களைய அரசு நடவடிக்கை எடுப் பது பற்றி பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் கூறினார்.

**15—12—80**

தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சி திட்டங் களுக்காக மத்திய அரசு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும், மகாபலிபுரத்தில் ஒளி-ஒலிக் காட்சிக் கான திட்டத்தை விரைவில் மேற் கொள்ள வேண்டும் எனவும் டெல்லியில் நடந்த சுற்றுலாத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் வலியுறுத்தி னார்.

**16—12—80**

தமிழகத்தில் 1980-81 நிதியாண்டில் புதிதாக 25000 பள்ளிக் கட்டிடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் இதற்காக ரூ. 5 கோடியை அரசு ஒதுக் கியுள்ளது என்று மாண்புமிகு உள்ளாட் சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தை வேலு அவர்கள் தெரிவித்தார்.

தொகுப்பு: மருது

## 16—12—80

தமிழ் நாட்டில் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் சிறு சர்க்கரை ஆலைகளை அமைப்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் கூறினார்.

## 17—12—80

தமிழக சட்டமன்ற, மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் ஜனவரி 1981 முதல் வங்கிகள் மூலம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

மேகாலய மாநிலத்தின் மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் திரு பி.ஜி. மோமின் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழகத்திலிருந்து 45 என்ஜினியர்கள் அனுப்பப்படுகிறார்கள் என்று மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் திரு கா. ராசாமுகம்மது அவர்கள் தெரிவித்தார்.

## 18—12—80

புதிதாக நியமிக்கப்படவுள்ள முழுநேர கிராம அதிகாரிகளின் பணிகளுக்கான தேர்வுகளை தமிழ்நாடு தேர்வாணைக் குழு மூலம் நடத்தும் என்று அரசு அறிவித்துள்ளது.

## 19—12—80

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அருகே திப்பணம்பட்டி கிராமத்தில் ரூ. 21 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ள ஐம்புநதி அணைக்கட்டு மற்றும் நாராயணப்பேரி கால்வாய்த் திட்டப் பணிக்கு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். என். இராசேந்திரன் அவர்கள், தலைமையில், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

## 20—12—80

தர்மபுரி மாவட்டத்தில் 14 ஆயிரம் குடிசைகளுக்கு மின்விளக்கு வசதியும், 240 சிறு தீப்பெட்டி தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார்.

## 21—12—80

இந்தியாவிலேயே முதன் முதலாக திருப்பூரில் பனியன் தொழிலுக்காக 'சிட்கோ' மூலம் தனியாக தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு வருகிறது. என்று மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறினார்.

## 22—12—80

சென்னை நகரில் உள்ள மலையின குறவர்களுக்கு குடிசைமாற்று வாரிய வீடுகள் கட்டப்படும் என்று குடிசைமாற்று வாரியத் தலைவர் திரு டி.கே. கபாலி அவர்கள் கூறினார்.

## 23—12—80

புதிதாக காவல் துறையில் சேருவோருக்கு பயிற்சி அளிக்க மாவட்டந்தோறும் ஒரு பயிற்சிக் கல்லூரி அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தலைமை இயக்குநர் திரு டிடி.பி.அப்துல்லா அவர்கள் கூறினார்.

## 24—12—80

திருச்சியில் குடிசைவாழ் மக்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்காக ரூ.8365 இலட்சம் செலவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதனால் 54 குடிசைப்பகுதிகள் பயன் பெறும். இத்தகவலை மாண்பமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்தார்.

## 25—12—80

தமிழக உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக உள்ளது என்று மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறினார்.

## 26—12—80

ரூ. 1 கோடி செலவில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வலினரகம் என்ற இடத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்ட அரசு முடிவு எடுத்துள்ளது என்று மீனளத்துறை இயக்குநர் திரு சி.செல்லப்பன் அவர்கள் தெரிவித்தார்.

## 28—12—80

மதுரை மாநகராட்சி அலுவலகத்திற்குள்ள பூங்கா எதிரில் கலை நுணுக்கத்துடன் உலகத் தமிழ் மாநாடு நினைவுத் தூண் ரூ. 30 ஆயிரம் செலவில்அமைக்கப்படும் என்று மதுரை மாநகரத் தந்தை திரு எஸ்.கே. பாலகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்தார்.

## 30—12—80

மதுரையில் ரூ. 14 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தையும், ரூ.11 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட மாநகராட்சிப் பணிகள் தங்கும் விடுதியையும் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் திறந்து வைத்தார்கள் விழாவிற்கு மாநகரத் தந்தை திரு எஸ். கே. பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

தூத்துக்குடி நகராட்சியின் வளர்ச்சிக்கு ரூ. 10 இலட்சம் அளிக்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு பா. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்தார்.



# காக்கைக்குச் சோறிடுவது ஏன்?

**- கவிஞர் தமிழ்முடி**

மாணவர் பக்கம்

வெளியில் சென்று வீடு திரும்பிய தந்தையார், மகன் சிவராமன் அழுவதைக் கண்டு திடுக்கிட்டார்,

''ஏன்டா அழறே? அம்மா அடிச்சாளா?'' என்று அன்புடன் கேட்டார்.

''அம்மா அடிக்கலே!..'' மேலே சொல்ல முடியாமல் தேம்பினான்.

''பின் ஏன் அழறே?'' என்றார். அக்கறையுடன்.

''நான் சாப்பிட வைத்திருந்த 'பக்கோடா' பொட்டலத்தைச் சனியன் பிடித்த காக்காய் பிடுங்கிக் கொண்டு போயிருச்சு!'' என்றான் பொங்கிய அழுகையுடன்.

''காக்காய் பிடுங்கிக்கொண்டு போனது சரிதான்!'' என்றாள் அப்பொழுது அங்கு வந்த அவன் அம்மா.

''ஏன் அப்படிச் சொல்றே?'' என்றார் அப்பா.

''பின்னே என்ன? 'அலமாரியிலே' பக்கோடா பொட்டலம் இருக்கு. பள்ளிக்கூடம் போயிருக்கும் தங்கை வந்ததும், அதை ஆளுக்குப் பாதியாகப் பிரிச்சுச் சாப்பிடுங்க என்று எவ்வளவோ சொன்னேன். ஆனால் இவன் கேட்கவே இல்லை.

''தங்கைக்குத் தரவே மாட்டேன். நானேதான் சாப்பிடுவேன்'னு பிடிவாதமாகப் பொட்டலத்தை எடுத்துக் கொண்டு, தோட்டத்துக்கு ஓடினான். ஆனால், அதே சமயம் ஒரு காக்காய் வந்து, அவனுடைய பக்கோடா பொட்டலத்தைப் பறித்துக் கொண்டு பறந்து விட்டது'' என்று சொல்லி விட்டு, வேலையைக் கவனிக்க விட்டிற்குள்ளே போய்விட்டாள்.

அதைக் கேட்டதும் அழுகை அழுகையாக வந்தது சிவராமனுக்கு. அவனைத் தேற்றிச் சமாதானப்படுத்த விரும்பிய தந்தை அவனிடம் கூறினார்:

''சிவராமா! பொட்டலம் போனால் போகிறது. அழாதே! காக்கை மிகவும் நல்ல பறவை. ஆயிற்றே! அதனால்தான் நம் வீடுகளிலே சாதாரண நாள் ஆனாலும் சரி, விசேட - விழா நாளானாலும் சரி. சமைத்த சோறு முதலியவற்றைக் காக்கைக்குப் போடுகிறோம் அல்லவா?'' என்றார்.

''ஆமாப்பா! அது ஏன்? அதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை, நீண்ட நாளாகவே இருந்தது?'' என்றான் சிவராமன்

''நல்லது. அதைப் பற்றிச் சொல்கிறேன். கவனமாகக் கேள்!'' என்று தொடங்கினார் அவன் தந்தை.

''நமது முன்னோர்கள் நம்மை விட மிகவும் பெரியவர்கள்; அறிவாளிகள்; வணக்கத்துக்கும் வாழ்த்துக்கும் உரியவர்கள். அவர்களைப் போற்றி மரியாதை செய்வதுநமது முதல் கடமையாகும். அவ்வாறு மரியாதை செய்து வழிபடுவதிலே உணவு படைத்து வழிபடுவதும் ஒரு முறையாகும். அதற்காகத்தான் காக்கைக்குச் சோறிடுகிறோம்..''

''அதற்காகக் காக்கைக்கு மட்டும் ஏன் சோறிட வேண்டும்? வேறு பறவைகளுக்கோ, விலங்குகளுக்கோ ஏன் இடக்கூடாது?'' என்று கேட்டான்.

''நல்ல கேள்வி கேட்டாய்! காரணம் சொல்கிறேன் கேள்! இறந்துபோன நமது முன்



## யாருக்கு யார்?

புகழ்பெற்ற சில தலைவர்கள், விஞ்ஞானிகள், கவிஞர்கள் ஆகியோரைத் தெரிந்து வைத்திருக்கும் நாம், அவர்களது இல்லத்தரசிகளின் பெயர்களை அறிந்து வைத்திருக்கிறோமா?

இங்கே சில பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களின் மனைவியர் பெயரை நினைவு கூர்ந்து பாருங்கள்:

1. காந்தியடிகள்
2. மோதிலால் நேரு
3. வல்லபாய் படேல்
4. ஜவகர்லால் நேரு
5. லால்பகதூர் சாஸ்திரி
6. வ. உ. சிதம்பரனார்
7. இராஜாஜி
8. பெரியார் ஈ. வெ. ரா.
9. திரு வி. கலியாணசுந்தரனார்
10. சுப்ரமணிய பாரதியார்
11. பாரதிதாசன்
12. தேசிக விநாயகம்பிள்ளை
13. நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை
14. இரவீந்திரநாத் தாகூர்
15. மறைமலையடிகள்
16. உ. வே. சாமிநாத அய்யர்
17. அறிஞர் அண்ணா
18. சர் சி. வி. இராமன்
19. டாக்டர் அம்பேத்கார்
20. டாக்டர் சுப்பராயன்

(விடை : அடுத்த பக்கம்)

னோர்கள் நாம் படைக்கும் உணவை, காக்கையின் வடிவத்திலே வந்து ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதாக ஒரு நம்பிக்கை. அதாவது ஐதீகம்.''

''அதற்காகத்தான் சோறிடுகிறார்களா?'' என்றான் சிவராமன். ''அதனாலே மட்டுமன்று. மற்றொரு காரணத்துக்காகவும் சோறிடுகிறார்கள்'' என்றார் தந்தையார். அதே சமயம் அங்கு வந்த அவன் அம்மா, ''அந்த மற்றொரு காரணம் என்ன?'' என்று கேட்டாள்.

''அந்தக் காலத்திலே வாழ்ந்து வந்த பெரிய பெரிய அரசர்கள், மடாதிபதிகள், தலைவர்கள் போன்றவர்களுக்கு நிறைய போட்டியும், பகையும் இருக்குமாம். அதனாலே அவர்களை வஞ்சகமாக ஒழிக்கக் கருதி, அவர்கள் உண்ணும் உணவுகளிலே, சில சமயங்களிலே கொடிய நஞ்சைக் கலந்தும் வைத்து விடுவார்களாம்.

''அதனாலே தமக்குப் படைக்கும் உணவில் நஞ்சு கலந்திருக்கிறதா? 'இல்லையா? என்று கண்டறிந்த பிறகுதான் சாப்பிடுவார்களாம். அப்படிக் கண்டறிவதற்காகத்தான், முதன் முதலிலே காக்கைக்குச் சோறு போடுவார்களாம். அந்தச் சோற்றில் நஞ்சிருந்தால் தின்னும் காக்கைகள் இறந்து விடுமாம். இந்த உண்மையை அறிந்து கொள்வதற்காகத்தான்......

''காக்கைக்குச் சோறிடும் வழக்கம் ஏற்பட்டதாக்கும்!'' என்றாள் அவன் அம்மா குறுக்கிட்டு.

''அந்தக் காரணத்துக்காகத்தான் காக்கைக்குச் சோறிடும் வழக்கம் ஏற்பட்டது என்று சொல்லிவிட முடியாது!'' என்றார் தந்தையார்.

''அப்படியானால், வேறு என்ன காரணத்திற்காகத்தான் காக்கைக்குச் சோறு போடும் வழக்கம் ஏற்பட்டதாம்?'' என்றான் சிவராமன்.

'வீடு என்றால் பொதுவாக அம்மா - அப்பா, தாத்தா-பாட்டி அண்ணன்—தம்பி, அக்காள்—தங்கை, மாமன்-மாமி முதலிய பலரும் இருப்பார்கள், இருக்கலாம். பலவிதமான உறவு முறைகளும், குணங்களும் உடையவர்களும் ஒரே வீட்டிலே - ஒன்றாக வாழ நேரிடலாம் அல்லவா ?''

''ஆமாப்பா!''

''அவர்களுக்குள்ளே, ஏதாவது ஒரு காரணத்துக்காக, எப்பொழுதாவது சிறு பூசல் சிறு சண்டை அல்லது மனத்தாங்கல் ஏற்படலாம். அதன் காரணமாக, மனம் சிறிது மாறுபட்டு, அன்பும் வேறு பட்டு ஒற்றுமை கூடச் சிறிது குறையலாம்.

''அவ்வாறு மனம் மாறுபட்டு-அன்பு வேறு பட்டு ஒற்றுமை குறைந்த குடும்பத்தை மீண்டும் ஒற்றுமைப் படும்படி செய்யச் சிறந்த வழி, அவர்களுக்குள் ஒன்று கூடிச் சேர்ந்து உண்ணும் வழக்கத்தை மேற்கொள்ளும்படி செய்வதே ஆகும்.

''தனக்குக் கிடைக்கும் எந்தப் பொருளையும், பிறர்க்குப் பகிர்ந்து கொடுத்து உண்ணும் வழக்கம் வாய்த்து விட்டால், போதும். பிறகு, அன்பு, உறவு, பொறுமை முதலிய யாவும் மனிதர்க்கு வந்து விடும். பஞ்சம், பட்டினி, பதுக்கல் முதலிய யாவும் நீங்கி விடும் அல்லவா?'' என்றார் தந்தையார்.

''ஆமாம்!'' என்றான் சிவராமன்.

தனக்குக் கிடைப்பது சிறிதளவு உணவாக இருந்தாலும், அதைத் தான் மட்டுமே உண்டு வாழ நினையாமல், தன் இனத்தைக் கூவி அழைத்துக் கூடியுண்ணும் பழக்கம் உடைய ஒரே பறவை காக்கையே ஆகும். அதனால்தான் காக்கைக்கு விரும்பிச் சோறிடுகிறோம்!'' என்றார் தந்தையார்.

''அதற்காக ஏன், நாம் சாப்பிடுவதற்கு முன்னதாகவே காக்கைக்குச் சோறிட வேண்டும்?'' என்று கேட்டான் சிவராமன்.

''அறிவான கேள்வி கேட்டாய்! பறவை இனமாகிய காக்கை, தனக்குக் கிடைத்ததை, தன் இனத்தோடு கூடி யுண்ணும் காட்சியை மனிதன் கண்கூடாகக் காண்கிறான்; காண வாய்ப்பு ஏற்படுகிறது.

''அதைக் கண்ட பிறகாவது, ஆறறிவு பெற்ற மனிதன், தன்னைச் சார்ந்தவரையும் தன் இனத்தவரையும், பட்டினியால் வாட விடாமல், கூடி ஒன்றாகச் சாப்பிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் உண்டாகும்; உண்டாக வேண்டும் என்ற காரணத்தால்தான் முதலிலே காக்கைக்குச் சோறிடும் வழக்கம் பண்டைக் காலம் தொட்டே பழக்கத்தில் இருந்து வருகிறது. இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்திருந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் தெரிவித்திருக்கிறார்.

'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ராரக்கே உள!''

என்பதுதான் அந்தத் திருக்குறள்.

''அதோடு வேறு பல சிறப்புகளும் காக்கைக்கு உண்டு' என்றார் தந்தையார்.

'அந்த வேறு பல சிறப்புகள் யாவை?'' என்றான் சிவராமன்.

''பொழுது விடியும் முன்பே—நாம் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கு முன்பே, அதிகாலையிலேயே எழுந்திருக்கும் பறவை காக்கை தான். அதுதான் எழுவ

## விடை

1. கஸ்தூரி பாய்
2. சொரூப ராணி
3. ஐவேர்'-ா
4. கமலா
5. லலிதா தேவி
6. வள்ளியம்மை (முதல் மனைவி) மீனாட்சியம்மை (இரண்டாவது மனைவி)
7. அலர்மேலு மங்கை
8. நாகம்மை (முதல் மனைவி) மணியம்மை (இரண்டாவது மனைவி)
9. கமலாம்பிகை
10. செல்லம்மாள்
11. பழனியம்மாள்
12. உமையம்மை
13. சௌந்தரம்
14. மிருணாளினி தேவி
15. சவுந்தரவல்லி
16. மதுராம்பிகை
17. ராணி
18. திரிபுர சுந்தரி
19. லட்சுமி
20. ராதாபாய்

தொகுப்பு : சாரங்கன்

தோடு அல்லாமல், நம்மையும் விழித்தெழும்படி கரைந்து எழுப்பும் பெருமையும் உடையதாகும்'' என்றாள் அப்பொழுது அங்கு வந்த அவன் அம்மா.

''அது மட்டும் தானா? வீட்டுப்புற அசுத்தங்களை நீக்கித் தூய்மைப்படுத்துகிறது. அது போலவே வானவெளி 'அசுத்தங்களையும் நீக்கித் தூய்மைப்படுத்துகிறது. அதனால்தான் காக்கைக்கு 'ஆகாயத் தோட்டி' என்றும் 'சுற்றுப்புறத் துப்புரவுத் தோட்டி' என்றும் சிறப்புப் பெயர்கள் ஏற்பட்டுள்ளன'' என்றார் தந்தையார்.

''ஆகா! காக்கைதான் எவ்வளவு நல்ல பறவை! மனித வாழ்க்கைக்கு 'வழி காட்டியாக' விளங்கும் பெருமை உடையது. இவ்வளவு சிறப்புடைய காக்கைக்கு, முதலிலே சோறு படைத்து உபசரிப்பது எவ்வளவு பொருத்தம்?'' என்றான் சிவராமன்.

''திருவள்ளுவர் மட்டும் அல்லாமல், அவருக்குப் பின்வந்த அநேக புலவர்களும், காக்கைக்குச் சோறிட்டு, அதன் குணங்களைக் கடைப் பிடிக்க வேண்டிய தன் அருமை பெருமைகளையும் கூறியுள்ளார்கள். அவர்களிலே ஒருவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அவர் காக்கையைப் பற்றிப் பாடியுள்ள ஒரு பாடலை ....''

''நானே சொல்கிறேன் அப்பா!'' என்று சொன்னான் சிவராமன்.

காக்கை இடத்திலுள்ள ஒற்றுமை கண்டு - நாம் வாழ்க்கை நடத்தினால் நன்மை உண்டு!

## அறிவுச் சுடர்

சாதாரண நிலையில் கண்களில் அறுவை செய்வதைவிட, குறிப்பிட்ட திசுக்களை உறைய வைத்து அறுவை செய்வது மிகவும் எளிது. கண்ணில் தூசி போன்ற நுண்ணிய கண்ணாடித்தூள் பதிந்துவிட்டால், அதைக் கண்டுபிடித்து எடுப்பது கடினம். இனி 'கிரையோதெர்ம்' கருவி மூலம் இவ்விதப் பணியைச் செய்யலாம்.

நமது நாட்டில் ஏறத்தாழ 86,000 சாண எரிவாயுக் கலன்கள் இருப்பதாக 1979-ஆம் ஆண்டில் நடத்திய கணக்கெடுப்பின்படி தெரிய வந்துள்ளது. தமிழ்நாட்டிலேயே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சாண எரிவாயுச் சாதனங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது தெரிய வந்துள்ளது.

# கம்பியில்லாத் தந்தி

வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர் ஓரிடத்தில் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவன், ''எங்கள் நாட்டில் புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் நிலத்தைத் தோண்டினார்கள். ஆயிரம் அடி ஆழத்தில் கம்பி நீளமாகச் செல்வதைக் கண்டு பிடித்தார்கள். இதிலிருந்து எங்கள் முன்னோர்கள் தந்தி அனுப்பும் முறையை அறிந்திருந்தார்கள் என்பது தெரிகிறது'' என்று கூறினான்.

மற்றவன் சும்மாயிருப்பானா? அவன் தன் முன்னோர் பெருமையைக் கூறினான்.

''எங்கள் நாட்டிலும் புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் நிலத்தைத் தோண்டினார்கள். இரண்டாயிரம் அடிக்கு மேலும் தோண்டினார்கள். அங்கே கம்பியே இல்லை. தெரியுமா?'' என்று கூறினான்.

''இதில் என்ன பெருமை?''

''என்ன பெருமையா? இதிலிருந்து எங்கள் முன்னோர்கள் கம்பியில்லாத் தந்தி முறையை அறிந்திருந்தார்கள் என்பது தெரிகிறதல்லவா?'' என்றான் அவன்.

முன்னோர் பெருமையை முதலில் ஆரம்பித்தவன் வாயடைத்துப் போனான்.

பி. எம். இப்ராஹிம்

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை–600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

# செந்தமிழ்ச் சான்றோர்க்குச் சிலைகள்

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி மதுரை மாநகரில் 12 தமிழ் அறிஞர்களின் சிலைகள் 5.1.81 அன்று திறக்கப்பட்டன. சிலைகளைத் திறந்து வைத்தவர்களின் பெயர்களும் தலைமை வகித்தவர்களின் விவரமும் வருமாறு :

## தொல்காப்பியர்

தொல்காப்பியர் சிலையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு ப. உ. சண்முகம் தலைமையில், மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ் செழியன் திறந்து வைத்தார்.

## திருவள்ளுவர்

திருவள்ளுவர் சிலையை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. ராசாராம் தலைமையில் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் திறந்து வைத்தார்.

## பாண்டித்துரைத்தேவர்

பாண்டித்துரைத் தேவர் சிலையை மாண்புமிகு மத்திய அரசு வேளாண்மைத்துறை துணையமைச்சர் திரு ஆர். வி. சுவாமிநாதன் தலைமையில் மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் திறந்து வைத்தார்.

## ராபர்ட் டி நோபிளி

ராபர்ட் டி நோபிளி சிலையை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துச்சாமி திறந்து வைத்தார்.

## வேதநாயகம் பிள்ளை

வேதநாயகம் பிள்ளை சிலையை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் தலைமையில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கே. ராசாமுகமது திறந்து வைத்தார்.

## தனிநாயக அடிகள்

தனிநாயக அடிகள் சிலையை தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு பி. நெடுமாறன் தலைமையில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் திறந்து வைத்தார்.

## ஆறுமுக நாவலர்

ஆறுமுக நாவலர் சிலையை மாண்புமிகு தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி பாவலர் திரு மா. முத்துசாமி தலைமையில் மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் திறந்து வைத்தார்.

## சோமசுந்தரபாரதி

சோமசுந்தர பாரதி சிலையை காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு குமரி அனந்தன் தலைமையில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து திறந்து வைத்தார்.

## திரு.வி.க.

திரு.வி.க. சிலையை மாண்புமிகு தமிழக மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சி. தலைமையில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். ராகவானந்தம் திறந்து வைத்தார்.

## வீரமாமுனிவர்

வீரமா முனிவர் சிலையை மாண்புமிகு அரிசனநல - வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு விஜயசாரதி தலைமையில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் திறந்து வைத்தார்.

## உ. வே. சாமிநாத அய்யர்

சாமிநாத அய்யர் சிலையை, மாண்புமிகு மகளிர் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே தலைமையில் மாண்புமிகு சட்டம்-கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் திறந்து வைத்தார்.

## தேசிக விநாயகம் பிள்ளை

தேசிக விநாயகம் பிள்ளை சிலையை மாண்புமிகு ஊராட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு தலைமையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை-கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். என். ராசேந்திரன் திறந்து வைத்தார்.



தொல்காப்பியனார்





திருவள்ளுவர்



பாண்டித்துரைத் தேவர்



தத்துவ போதக சுவாமி
ராபர்ட் டி நோபிலி



மாயூரம் விற்பன்னர்
வேதநாயகனார்


தனிநாயகம் அடிகள்


ஆறுமுக நாவலர்


சோமசுந்தர பாரதியார்


திரு வி. கல்யாணசுந்தரனார்


வீரமாமுனிவர்


உ. வே. சாமிநாதையர்

கவிமணி தேசிக விநாயகம்





திருமலை மன்னர் சிலையை நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஏ. ஜி. சுப்பராமன் தலைமையில் சிறுசேமிப்புத்துறைத் துணைத் தலைவர் திரு எஸ். எஸ். ராஜேந்திரன் திறந்து வைத்தார்.



திருமலை மன்னர்

வெளிநாட்டிலிருந்து உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை தந்த பேராளர்கள் சார்பில் பாரதப் பிரதமர், மேதகு தமிழக ஆளுநர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆகியோருக்கு வரவேற்பு அளித்த காட்சி.





ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பு மலர் வெளியீட்டு விழா (7-1-81) அன்று மதுரை மூவேந்தர் அரங்கில் நடைபெற்றது. மலரை மாண்புமிகு தலைமை நீதிபதி திரு மு. மு. இஸ்மாயில் அவர்கள் வெளியிட முதல் பிரதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பு மலர் வெளியீட்டு விழாவில் (7-1-81) முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தஞ்சாவூர் தட்டு வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.





ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி தபால்-தந்தித் துறை வெளியிட்ட சிறப்புத் தபால் முத்திரையை 9-1-1981 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களிடம் மதுரை கோட்டக் கண்காணிப்பாளர் திரு ஏ. முருகேசன் அவர்கள் வழங்கினார்கள்.



ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி தமிழ்த் தொலை எழுதிப் பொறி (தமிழ் டெலிபிரிண்டர் ) துவக்க விழா 9-1-1981 அன்று நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தமிழ் தொலை எழுதிப் பொறியை மதுரையில் இயக்கி வைத்தார்கள்.



ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவன்று (10-1-81) மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தமிழ்நாடு ஓட்டலில் விருந்தளித்து தஞ்சாவூர் தட்டினைப் பரிசாக வழங்கிப் பாராட்டினார்கள்.



# வரலாற்று வண்ணத் திரைப்படம் குமரிக் கண்டம்

இல. இராசேந்திரன்

இப்போது இருக்கின்ற இந்தியாவுக்குத் தெற்கில், இப்போது இந்து மாக்கடல் இருக்கின்ற நீர் வெளியில் பெரியதோர் நிலவெளி இருந்தது. அதுதான் இலெமூரியா எனப்படும் 'குமரிக் கண்டம்'. அதுதான் நமது வரலாற்று மாளிகையின் திறவு கோல். உலக நாகரிகத்தின் தொட்டில். கவின் கலைகளின் பிறப்பிடம். கன்னித் தமிழ் முன்னோர்களின் இருப்பிடம்.

குமரிக்கண்டத்தில் ஓடிய பஃறுளி ஆற்றங்கரையில் இருந்தது தான் தென் மதுரை; அங்கே தான் நம் அன்னைத் தமிழ்காக்கும் முதலாவது தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. ஒரு பெருங் கடற் கோளினாலே குமரிக்கண்டத்தின் பெரும் பகுதிகள் கடலுள் மூழ்கின.

'பஃறுளி யாற்றுடன்
பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல்
கொள்ள''

—என்கிற சிலப்பதிகார அடிகள் சொல்லுவது அதைத்தான்!

அந்தக் கடல் கோளுக்குப் பின்னாலே, முடத்திருமாறன் என்ற பாண்டிய மன்னன், கபாடபுரத்திலே இரண்டாவது தமிழ்ச்சங்கத்தை நிறுவினான்.

அந்தப் பகுதியும் அலைகடலின் கோரப்பசிக்கு இரையாகவே உயிர்மீண்டு தமிழ்ச்சுவடிகளோடு வந்த முடத்திருமாறன் மதுரை மாநகரிலே மூன்றாம் தமிழ்ச்சங்கத்தை நிறுவினான்.

எகிப்து நாட்டு பாபிரஸ் ஓலைச் சுவடிகளிலிருந்து, அழகு தமிழ் இலக்கியச் சான்றுகள் பலவும் இந்தச் சம்பவங்களை உறுதிப்படுத்துகின்றன.

—இந்த நிகழ்ச்சிக் கோவைகளின் அடிப்படையிலே தமிழ் நாடு அரசு திரைப்படத்துறையினர் வண்ணத்தில் தயாரித்துள்ள 'சினிமாஸ்கோப்' படம் தான் இலெமூரியா- குமரிக்கண்டம்.

ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டின் அடிப்படையில், மதுரை மாநகர், காந்தியடிகள் அருங்காட்சியக திறந்தவெளி அரங்கில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில், மாண்புமிகு கேரள முதல்வர் திரு நாயனார் அவர்கள் (6.1.81) இதனைத் துவக்கி வைத்தார்.

படம் ஆரம்பித்த சில நிமிடங்கள் வரை விண்வெளிக் கோளங்களிலே நாமும் உலவுவது போல ஒரு பிரமை! ஆம். அந்தக் காட்சிகள் அவ்வளவு தத்ரூபமாகப் படமாக்கப்பட்டுள்ளன!

அடுத்து, தமிழ்ச் சங்கத்திலே பாண்டிய மன்னன் பைந்தமிழ்ப் புலவர்களோடு இணையாக அமர்ந்து தமிழ் ஆராய்ச்சிநடத்துதல், புலவர் பெருமக்கள் பூரித்திருத்தல், நாட்டுமக்கள் பண்பாடு-நாகரிகம் மிளிர மகிழ்ந்திருத்தல்-இப்படிப் பல சம்பவங்கள் 'குமரிக் கண்டம்' திரைப்படத்திற்கு அணி சேர்க்கின்றன.

படத்தின் கடைசிக் காட்சி— தமிழ்ச் சுவடிகளோடு தன்னந்தனியாக மதுரையினை வந்தடைந்த பாண்டியன் திருமாறன் தமிழன்னையின் திருவடிகளில் அவற்றைச் சேர்த்தான் என்று கூறப்பட்டிருப்பது திரைக்கலைக்குரிய அழகைச் சேர்க்கவும், உண்மைகளை உருவகமாகக் கூறவும் கையாளப்பெற்ற ஓர் உத்தி தான்.

ஆனால் இது மரபுக்கு மாறானது அல்ல என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

3,300 அடி நீளமுள்ள இந்த அருமையான திரைப்படம், திரைப்படத் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றவரும், தமிழ் நாடு அரசு திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி தலைவருமான திரு. ப. நீலகண்டன் அவர்களால் மிக அற்புதமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

பஃறுளியாற்றங் கரையிலே தொடங்கிய தமிழ்ச் சங்கத்தின் வரலாறு, குமரியாற்றங்கரையில் தொடர்ந்து... வைகை ஆற்றங்கரை வந்தடைந்த வரலாறு கூறும் இலெமூரியா - குமரிக்கண்

டம் திரைப்படம் சரியாக 35 நிமிடம் ஓடுகிறது.

### இயக்குநர்

ஒவ்வொரு தமிழ் மகனும் காணவேண்டிய இந்த ஒப்பற்ற வரலாற்றுத் திரைப்படத்தைக் காண வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், அரசு திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரித் தலைவரும், இயக்குநருமான திரு. ப. நீலகண்டன் அவர்கள் தெரிவித்த கருத்துக்களாவது:

“தமிழக முதல்வர், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களோடு கடந்த முப்பதாண்டுக் காலமாக நெருங்கிப் பழகியவன் நான். குமரிக் கண்டம் பற்றிய வரலாற்று நூல்களைப் படித்து நிறையத் திரட்டி வைத்திருந்த அவர்கள், அந்த வரலாற்றுச் சம்பவங்களைத் திரைப்படமாக்க வேண்டும் என்று கொண்டிருந்த ஆவலின் அடிப்படையிலேயே, தமிழ்த் தாய்க்குத் தக்கதோர் காணிக்கையாக இதுவும் அமையும் என்ற எண்ணத்திலேயே இந்தப் படத்தை உருவாக்கத் திட்டம் வகுத்துத் தந்தார்கள்.

“அந்தக் குமரிக் கண்டத்தின் மேன்மை, பண்பாடு, நாகரிகமெல்லாம் திரும்பவும் தமிழகத்திலே நிலவவேண்டும் என்பதுதான் நமது முதல்வர் அவர்களின் ஆசை.

“இந்தப் படத்தில் ஏதேனும் குறை இருக்குமானால் அதற்கெல்லாம் நானே பொறுப்பேற்கிறேன். ஏதேனும் சிறப்பாக இருக்குமானால் அதற்கெல்லாம் புரட்சித் தலைவர் அவர்களே காரணம். இந்தப் படம் குறித்த காலத்தில் முடியவும், நல்லபடி உருவாகவும் ஒத்துழைத்த எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### கேரள முதல்வர்

இலெமூரியா—குமரிக்கண்டம் படத்தைத் துவக்கி வைத்த மாண்புமிகு கேரள முதல்வர் திரு நாயனார் அவர்கள் தமது உரையில், ‘‘மலையாளம் தமிழ் மொழியின் சகோதர மொழியாகும். முதலில் கேரளம் தமிழ் நாட்டுடன் இணைந்தே இருந்தது. அதற்குப் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த குமரிக் கண்டம்' என்ற நிலப் பகுதியைப் பற்றியது இந்தத் திரைப்படம். இதைத் துவக்கிவைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்'' என்று குறிப்பிட்டார்.



இங்கு பேசியவர்கள் தமிழில் இன்னும் பல எழுத்துக்களைச் சேர்க்கவேண்டும் என்றார்கள். 26 எழுத்துக்கள் கொண்ட ஆங்கிலம் உலக மொழியாக இருக்க முடிகிறபோது அதிகமான எழுத்துக்களைத் தமிழில் சேர்த்தால்தானா அப்படி முடியும்? சிந்திக்க வேண்டும். எழுத்துக்கள் அதிகமானால் படிக்கச் சிரமப்படவேண்டியிருக்கும். எழுத்துச் சீர்திருத்தம், அதிகமாயுள்ள எழுத்துக்களைக் குறைப்பதற்காகவே இருக்க வேண்டும்.

—மாண்புமிகு முதல்வர்.
(உ.த.மா. தொடக்க விழா)

### தமிழக முதல்வர்

திரைப்படத் துவக்க விழாவுக்குத் தலைமை வகித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் பேசியதாவது:

‘‘இந்தப் படத்திலே சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் பற்றி அறிஞர் பெருமக்கள் தங்களது எண்ணங்களை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். இதற்கு மேலும் ஏதேனும் வரலாற்று உண்மைகள் இருந்து தெரியப்படுத்தினால், ஏதேனும் மாற்றங்கள் செய்து இந்தப் படத்தை இன்னும் எடுக்க முடியும்.

‘‘இலெமூரியா கண்ட வரலாறு இளமை முதலே என்னோடு ஊறிப்போன ஒன்றாகும். இருபத்து நான்கு அல்லது இருபத்தைந்து வயதில் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் எழுதிய புத்தகத்தைப் படித்ததால் தோன்றிய எண்ணம் இந்தப் படத்தைப் பார்க்கின்றபோது நிறைவேறி விட்டதாகக் கருதுகிறேன்.

“படம் பார்த்து முடிந்ததும் நீதிபதி மகராஜன் அவர்கள் எனது கையைப் பிடித்துக் கொண்டு மிகவும் அற்புதமாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள் என்று மனப்பூர்வமாகப் பாராட்டினார்.

“இந்தப் படத்தைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்பவர்கள் தமிழ் தெரிந்தவர்களாக, தமிழிலக்கியங்களில் ஈடுபாடு கொண்டவர்களாக, செம்மையாக எண்ணியதை வெளியிடும் திறமையும் உள்ளவராக இருக்கவேண்டும் எனத் தேடினேன். ப. நீலகண்டன் அவர்கள்தான் எனக்குக் கிடைத்தார். இதற்கு அவர்தான் சரியானவர் என்று நான் நம்பினேன்; நம்பிக்கெடவில்லை; வெற்றியே பெற்றிருக்கிறேன்.

“இதில் ஏதாவது குறையிருந்தால் அதை ஏற்கும் பொறுப்பு என்னையே சேரும்.

‘‘தமிழ்ப் பெருமக்கள் அத்தனை பேரும் இதை ஓர் அடையாளச் சின்னமாக வைத்துக் கொண்டு மேலும் ஆராய வேண்டும் என்ற கருத்திலேயே இந்தப் படம் பிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இதற்காகச் செய்யப்பட்ட செலவு வீண் விரயமில்லை.

“கேரள முதல்வர் அவர்கள் இங்கே பேசும்போது தமிழும் மலையாளமும் சகோதர மொழிகள் என்று குறிப்பிட்டார். தாயும் மகளுமே தவிர அக்கா தங்கை அல்ல. அந்த வகையில் நாயனாரும் தமிழர்தான்.

“நம்முடைய மாநிலங்களுக்கு இடையிலான உறவு பிரிக்கமுடியாதது. ஒன்றைப் பெறுகிறபோது ஒன்றை விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும். எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். ஒரு நல்ல காரியம் செய்கிறபோது அதையெல்லாம் பொருட்படுத்தக்கூடாது. எதை விட்டுக் கொடுக்க வேண்டுமோ அதை விட்டுக் கொடுக்க வேண்டும். இதை, கண்ணகி கோயிலுக்காகத்தான் சொல்கிறேன். வரப்புச் சண்டை போல எதற்காக?

“இந்தப் படத்திற்கான உரையாடலையும் எழுதி இயக்கிய நீலகண்டன் அவர்களையும், உடன் ஒத்துழைத்த ஒளிப்பதிவாளர்கள், ஒலிப்பதிவாளர்கள், இசையமைப்பாளர், காட்சிகளை அமைக்கப் பாடுபட்டவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

“இது மக்களுக்காக எடுக்கப்பட்ட படமே தவிர, வியாபார நோக்கோடு பிடிக்கப்பட்டது அல்ல.’’

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில் செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் நன்றி கூறினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002


இயற்கை அழகுக்கு
இணை இதுவே!
கோ-ஆப்டெக்ஸ்

Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண் M. 8676



ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக மதுரை தமுக்கம் திடலில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பண்பாட்டுக் கலைகளை வடிவமைத்துக் காட்டும் கண்காட்சியை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில், மாண்புமிகு கர்நாடக மாநில முதல்வர் திரு ஆர். குண்டுராவ் அவர்கள் தொடங்கி வைத்தார். (5-1-'81)





ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டினையொட்டி மதுரையில் மன்னர் திருமலைநாயக்கர் மகாலில் அமைக்கப்பட்டுள்ள ஒலி, ஒளிக் காட்சியினை 7.1.81 அன்று மாண்புமிகு ஆந்திர மாநில கல்விச் சாரத்துறை அமைச்சர் திரு பட்டம் ஸ்ரீ. இராம மூர்த்தி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

'குமரிக் கண்டம்' வரலாற்று வண்ணத் திரைப்படக் காட்சியில் மாண்புமிகு கேரள முதல்வர் திரு இ. கே. நாயனார் அவர்கள் மதுரை காந்தியடிகள் அருங்காட்சியகம் திறந்தவெளி அரங்கில் திரைப்படக் கருவியை இயக்கி துவக்கி வைத்தார். (6-1-'81)



